# கலைச்செல்வி

மார்ச் — ஏப்ரல் 1961..

3— 3/4



எங்கும் இதே பேச்சு!

எல்லோருக்கும் இதே மூச்சு !!

சோம்பலை ஓட்டிச் சுறுசுறுப்பைக் கூட்டும்

# யானை பீடியையே

## எல்லோரும் பாவிக்கின்றனர்.

தயாரிப்பாளர்:-

# யானை பீடிக் கம்பனி

62, மெசஞ்சர் வீதி : கொழும்பு-12

(போன் : (7651)

கிளை : 130, ஆதிருப்பள்ளித்தெரு : கொழும்பு-13

---

**கௌரவம் மிக்கவர்கள்,**
**கனதனவான்கள்,**
**கந்தோர் அதிகாரிகள்,**
**கஷ்டப்படும் தொழிலாளர்கள்**

எல்லோரும்

காரம்
மணம்
குணம்
நிறைந்த

# கனகலிங்கம்ஸ்


சுருட்டுகளை

புகைத்துப் பெரும் பயன் அடைகின்றார்கள்.

# கனகலிங்கம்ஸ்

இல: 17, சென். ஜோன் வீதி :: கொழும்பு.

Phone : 5883. Cable : KANCIGARS.


உங்கள் வியாதி
எதுவானாலும் சிறந்த
வைத்திய ஆலோசனை
பெற்றுக் கொள்க
மக்கள் வைத்திய சாலை
சுன்னாகம்

# S. SINNATHURAI & BRO,




786 கல்கி பீடி

Importers & Exporters.
Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்

உல்லாசமாகப்
புகைப்பதற்கு

## 786 கல்கி பீடிகள்

**திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. றேட் : : யாழ்ப்பாணம்.**

கிளை:
44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு.

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

# கலைச்செல்வி

ஆசிரியர் : சிற்பி

துணை ஆசிரியர் : தமிழ்ச்செல்வன்

## உள்ளே......


சிறுகதை :

கடன்காரன்.

பெண்ணிற் பெருந்தகை.

கண்ணாடி.

அவள் சிரித்தாள்.

தொடர்கதை :

மனப்பாறை.

கட்டுரை :

அ. இ. பாதசாரிகள் சங்கம்

கவிதை :

இன்பமடா.

அன்னை விலங்கு அறுத்தெறிவோம்! வா! வா!

பிற :

தமிழ் மகனே !

சத்தியாக்கிரகம். (படங்கள்)

பட் பட்.

பத்தாம் பக்கம்

இளைஞர் மன்றம்.

சினிமாப் பகுதி.

அறிவு வளர்ச்சிப் போட்டி.

உங்கள் கருத்து.



உங்களை

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

அழைக்கின்றது

எங்களிடம் உங்களுக்குத் தேவையான

புடவைத் தினிசுகளும், சாய்ப்புச் சாமான்களும், அலங்காரப் பொருட்களும் சேலை வகைகளும் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருமுறை வந்து உண்மையை உணருங்கள்.

நம்பிக்கையும் நேர்மையுமான இடம்

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

78, கே. கே. எஸ், வீதி: யாழ்ப்பாணம்,

# 'சிரநேத்திராஞ்சனத் தைலம்'

விடுதலையளிக்கும்போது. நீங்கள்

**சிரசு கண் மூக்கு**

சம்பந்தமான வியாதிகளினால் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம்

தொடர்பு கொள்ளவும்.

## மு. க. ஜெகநாதன்

**யூனானி கண் நிபுணர்**

பெரியகடை : யாழ்ப்பாணம்

---

இன்பம் தரும் இனிய உணவு வகைகட்கு

## இன்ப நிலையம்

சுவை நிறைந்த

விலை குறைந்த

சிற்றுண்டிகட்கு

## இன்ப நிலையம்

நறுமணம் மிகுந்த காப்பி,

தேநீர் பானங்கட்கு,

# இன்ப நிலையம்

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

கல்யாண வைபவங்கட்கும் மற்றும் விசேடவிழாக் களுக்கும்ஓடர் பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்.

இன்ப நிலையம்

ஸ்டேசன் வீதி, : சுன்னாகம்.

# கலைச்செல்வி

" தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும் " -- பாரதியார்.

கலை : 3 | 1961—பங்குனி சித்திரை. திருவள்ளுவர் ஆண்டு : 1992. | காட்சி : 3 - 4


# தமிழ் மகனே!

ஈழம் வாழ் தமிழ் மகனே! ஏற்றுகின்றோம்; போற்றுகின்றோம்; இதயம் கனிந்துதிர்த்த வாழ்த்துகளைச் சூட்டுகின்றோம்!

## அன்று......?

அரங்கில் ஏறினாய்; ஆவேசக் குரல் கொடுத்தாய்; அடுக்கு மொழிகளை அள்ளி அள்ளி வீசினாய் கைதட்டி ஆர்ப்பரித்து உற்சாகம் ஊட்டினோம்.

அதே வேளையில் கவலையும் பயமும் எம்மைக் கௌவிப் பிடித்தன.

வெறும் வாய்ப்பேச்சு வீரனாக நின்று விடுவாயோ என்று கவலையடைந்தோம். உள்ளத்திற்கும் உதட்டிற்கும் உறவே ஏற்படாதோ என்று பயந்தோம்.

காரணம்?

மதத்தால் உனக்குள் பிரிவுண்டு. சாதியால் உள்ளே பிளவுண்டு அரசியல் கொள்கைகளால் கருத்து வேற்றுமை உண்டு. போட்டி, பொறாமை பூசல்கள் நிறைய உண்டு.

இவற்றை மறந்துவிட்டு உன்னால் ஒன்றுபட முடியுமா? அன்னை மொழி காக்க, அனைவரையும் அணைத்துக்கொண்டு அறப்போர் புரிய உன்னால் முடியுமா?

## இன்று......?

முடியும் என்பதைக் காட்டிவிட்டாய்!

இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் இஸ்லாமியர்களையும் இணையச் செய்தாய்!

உயர்ந்தோரையும் தாழ்ந்தோரையும், இடையிலுள்ள ஓராயிரம் சாதிப் பிரிவினரையும் ஒன்று சேர்த்துவிட்டாய்!

கவலை கலைந்து விட்டது; பயம் பறந்துவிட்டது.

குலையாத உன் உறுதிகண்டு குதூகலிக்கின்றோம்.

சலையாத உன் ஒற்றுமை கண்டு களிப்படைகின்றோம்.

விலையிலா உன் இலட்சியம் கண்டு வெற்றிப் பெருமிதம் அடைகின்றோம்.

இன்று இல்லாவிட்டாலும் என்றோ அந்த ஒன்று உனக்குக் கிடைத்தே தீரும்.

அந்த ஒன்று...?

வெற்றி!

உன் உறுதியின் வெற்றி! உன் ஒற்றுமையின் வெற்றி! உன் இலட்சியத்தின் வெற்றி!!!

## உங்கள் கருத்து

ஓடி விட்ட கதை!

"மங்கை" எழுதிய "ஓடிவிட்டார்கள்" என்ற கதையில், பால — முத்துச்சாமி தம்பதிகளின் வளர்ப்புப் பிள்ளை. அமுதா — மரகதம், முத்துச்சாமி கருவில் வளர்ந்தவள். கதையின் முடிவில் பாலுவின் தங்கை அமுதா என்று கூறப்பட்டுள்ளதே, எப்படி?

கொழும்புத்துறை. ஜெயத்தம்பி.

மாசி காதலி

க. சுப்பிரமணியம் சென்ற மாசி இதழில் எழுதிய "மாஜி காதலிக்கு" என்ற கட்டுரையைப் படித்து என்னால் சிரிக்காமலும், சிந்திக்காமலும் இருக்க முடியவில்லையே!

எருக்கலம்பிட்டி. —அன்பர்.

'மாஜி காதலிக்கு' — வாசித்து நான் சிரிப்புக்கடலில் மூழ்கினேன்.

யாழ்ப்பாணம். க. தம்பையா.

என்னையும் என் நண்பர்களையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து விட்டாள் க. சுப்பிரமணியத்தின் மாஜிக் காதலி!

செ. அமரசிங்கம்,

பீ. ஏ. தம்பி ஒழுங்கை,

தூக்கிய திருவடி,

இறைவன் திருவடிகளின் கருணையினால் ஆனந்த பரவசராகி மெய்ம் மறந்து துதிக்கும் நங்கையின் திருவுருவை வர்ணக் கலவையிலமைத்த குமாருக்கு என் பாராட்டுக்கள்.

திருமலை. ஏ. பத்மாசனி


காற்றில் பறக்கும் தொப்பி.

14-2. கல்கியில் வெளியான "மஞ்சள் ரோஜா" சிறுகதையைப் படித்தால் இந்தியப் பத்திரிகையாசிரியர்களின் தன்மை நன்கு புலப்படும். ஈழத்தெழுத்தாளர் மானம் காற்றிற் பறப்பதையும் உணரலாம்,


பொத்துவில், முதல்வன்.

உதயணனும் நவமும் சிறந்த எழுத்தாளர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களால்தான் ஈழத்தில் சிறுகதையின் மானம் பிழைக்கிறது என்றால் அது பிற எழுத்தாளர்கள் அத்தனை பேருக்கும் அவமானம், அவமானம், அவமானம்.


சண்டிருப்பாய், சு. மகாலிங்கம்



"மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் நாம் தமிழர்கள் தான். தமிழ்மொழிப் போராட்டத்தில் ஏனைய தமிழ்பேசும் மக்களுடன் தோளோடு தோள்நின்று பாடுபடத் தயங்கமாட்டோம்" என்று கூறிக்கொண்டு ஏராளமான முஸ்லிம் பெருமக்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்துகொள்கின்றனர்: முன்னாள் மேயர் எம். எம். சுல்தான், முன்னாள் உதவி மேயர் V. M. அபுசாலி ஆகியோர் தலைமையில் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர்.



மட்டக்களப்பு என்றதும் அந்த மீன்பாடும் தேனாட்டின் வாவிகள்தான் நினைவில் வருகின்றன. கப்பலோட்டிய கன்னித் தமிழர்கள், இன்று கடும் வெய்யிலில் இருந்து சத்தியாக்கிரகம் செய்கின்றனர். கடலேறிக், கப்பலேறி, கன்னித் தமிழ் காக்க நிற்கும், மட்டுநகர் வீரர்களின் உணர்ச்சிதான் என்னே!



அரசாங்கத்தின் மொழிச் சட்டத்தினுல் எதிர்காலத்தில் அதிக அளவு பாதிக்கப்படுபவர்கள் தமிழ் பேசும் மாணவ மாணவிகளாவர். குறும்பிற்கும் விளையாட்டிற்கும் பேர்போன மாணவர்கள் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும அமைதியாக ஊர்வலம் நடாத்தும்போது, தமிழ் மொழிப் போராட்டம் வெற்றி தரும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றதல்லவா? திருக்கோணமலை மாணவர் களின் ஊர்வலத்தை இங்கே காணலாம்.

# பத்தாம் பக்கம்

என்னை மறந்து விட்டு
எங்கே இப்போ மறைந்து விட்டாய்

நாளெல்லாம் உழைத்துழைத்து
நான் களைத்து வரும்போது
நலமுடனே சோர்வகற்றும்
நற்றுணையே எங்கு சென்றாய்?

தீராத தலைவலியா?
தொலையாத வேதனையா?
'தொப்' என்று விழுந்தவுடன்
சொகுஸாகத் தூங்க வைப்பாய்!

பாலும் கசந்தெனக்குப்
படுக்கையும் நொந்துவிட்டால்
பாய்ந்தோடி வந்தேனே!
பக்குவமாய் அணைத்தாயே!

மாலை இளந்தென்றல்
மல்லிகைப் பூப் பந்தலின் கீழ்
நீ இருப்பாய்
நான் வருவேன்

மெதுவான உன் கைகளின்மேல்
கால் வைப்பேன்
களிப்படைவாய்.
உன் மடியில்
நான் கிடப்பேன்.
உவகைக்கோர் எல்லையுண்டோ?

யாருக்கு யார் அடிமை?
உன்னை என் அடிமை என்று
என்றேனும் சொன்னதுண்டா?


நான் உந்தன் அடிமையென்று
நான் ஒப்புக் கொண்டேனா?
எவர்க் கெவரும் தாழ்வில்லை.
இருவரும் சமம் என்றே
இதுவரையும் வாழ்ந்தோமே!
இன்றென்ன நடந்ததென்று
என்னைவிட்டு ஓடிவிட்டாய்?

என் முதுகை நீ வருட
உன் சொகுஸில் நான் மயங்கி
எத்தனை கவிதைகளை
என் கையால் எழுதிவிட்டேன்!

கவிதை மட்டுமா தந்தாய்?
கதைகளும் கட்டுரையும் உருவாக
உதவி செய்தாய்
உன் மடியில் கிடக்கையிலே
உலகத்தை மறந்திடுவேன்!
கனவுகள் கற்பனைகள்
காதல் சொட்டும் காவியங்கள்
ஏராளம் ஏராளம்
நீ கொடுத்தவை ஏராளம்.
இத்தனையும் செய்து
இன்பம் அளித்த நீ

என்னை மறந்து விட்டு
எங்கே இப்போ மறைந்து விட்டாய்?

(தான் தினமும் உபயோகிக்கும் சாய்வு நாற்காலி திடீரென்று காணமற் போனதற்காக வருந்தி எழுத்தாளர் ஒருவர் பாடிய இரங்கற்பா).




எம். எம். முகைடீன், மத்திய கல்லூரி, மட்டக்களப்பு

கே: வட, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கம் வெற்றியளிக்குமா?

ப: தூய இலட்சியத்திற்காக, தூய்மையான முறையில் தொடர்ந்து நடைபெறும் சத்தியாக்கிரகம் நிச்சயம் வெற்றியைத்தரும். ஆனல் வெற்றியின் தன்மை, அது நிரந்தரமானதா, நீடித்து நிலைக்குமா என்பதெல்லாம் தலைவர்களின் இராஜதந்திரத்திலும் தீர்க்கதரிசனத்திலும் தான் தங்கியிருக்கின்றது.

பா. யேசுதாசராசன், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

கே: இலங்கையின் தேசீய பறவையாக எதைக்கொள்ளலாம்?

ப. காகத்தை! மொழி, இன, மத நிற வேறுபாடின்றி இலங்கையிலுள்ள பெரும்பான்மையானேர் காக்கா பிடிக்கும் கலையில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்ருர்களே!

கே: அமெரிக்க ஜனதிபதி கென்னடி குறித்துத் தங்கள் கருத்தென்னவோ?

ப. உதட்டளவில் மட்டும் நில்லாது உண்மையிலேயே உலக சமாதானத்திற்காக உழைக்கவேண்டும் என்ற உறுதி அவரின் பேச்சில் நிறைய இருக்கின்றது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலருக்கு முக்கிய பதவிகள் கொடுத்ததிலிருந்தே அவருடைய நல்லெண்ணம் தெரிகின்றதல்லவா? கென்னடியின் காலத்தில் அமெரிக்காவைக்கும் முன்னடிகள் பொன்னடிக இருக்கும்.

க. சுப்பிரமணியம், களபூமி, காரைநகர்.

கே. மக்கட்குச் சிறப்பைத் தருவது எது?

ப. மனிதத்தன்மை.

கே: உலகில் மேலான தொழில் எது?

ப. ஆகாயவிமானம் ஓட்டுதல்!

ஏ. யு. எம். ஏ. கரீம். இக்பால் இல்லம், கல்முனை.

கே; "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனக்கூறித் தமிழ் இலக்கியத்திற்கு அக்கால இலங்கை முஸ்லீம்கள் அளப்பரிய சேவையும் தியாகமும் செய்துள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இன்றைய அன்னாரது நிலைமை பற்றியும் மறைக்காமல் கூறமுடியுமா?

ப. தமிழ் இலக்கியத்திற்கு இந்தியாவிலும் ஈழத்திலுமுள்ள முஸ்லிம் புலவர்கள் பலர் தொண்டு செய்துள்ளார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. முத்தமிழிற்கும் முஸ்லிம்கள் செய்த தொண்டுகளைப் பற்றிக் கட்டுரைகள் மூலமும் சொற்பொழிவுகள் வாயிலாகவும் நன்கு எடுத்துக் கூறிவரும் எஸ். எம். கமால்தீன், எம். எம். உவைஸ், எச். எம். பி. முஹைதீன் இளங்கீரன், வி. எம். ஸம்சுதீன், எம், எச். எம். இப்ராகிம் முதலியோர், பழைய பெருமையுடன் நின்றுவிடாது, இன்று தாமாகவும் பல ஆக்கவேலைகள் செய்துவருகின்றனர். பித்தன், எம். எம். மக்கீன், அ. ஸ. அப்துஸ் ஸமது யுவன், முத்தூர்க்கவிராயர் முதலியோர் இன்றைய நல்ல எழுத்தாளர்கள். இலங்கையில், அதிக அளவில் வாசகர் கூட்டத்தைப் பெற்றுள்ள ஒரே ஒரு நாவலாசிரியர் இளங்கீரன் ஒரு முஸ்லீம் என்பதில் முஸ்லிம் சமுதாயம் முழுவதுமே பெருமைப் படலாமல்லவா?

வி. நடராசா, அந்தோனியார் கல்லூரி, கண்டி.

கே: கல்விமந்திரி பதியுதீனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப. சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர்களுள் ஒருவர் என்பதாலும், காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்கட்குப் பலதடவை கைகொடுத்துதவியவர் என்பதாலும் அரசாங்க வட்டாரத்தில் அவருக்கு நல்ல செல்வாக்கு இருக்கின்றது. தேசீயக் கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவே பாடசாலைகளை அரசாங்க உடமையாக்குகின்றோம் என்று சொல்லிப் பாடசாலைகளைத் தேசீயமயமாக்கி விட்டு, இப்போது தேசீயக் கல்வித் திட்டம் என்ன என்பதை விளக்கத் தெரியாமல் முழிக்கும் அவரைப்பற்றி, முஸ்லிம் மக்களின் உண்மையான மன விருப்பத்தைத் தெரிந்துகொள்ள விரும்பாமல், தன் இஷ்டப்படி வானொலியிலும் பத்திரிகைகளிலும் அறிக்கைவிடும் அவரைப்பற்றி வேறு என்ன சொல்ல இருக்கிறது?

எஸ். குமரவேல், திருக்கேதீஸ்வரம், மன்னார்.

கே, நல்ல முகவெட்டு ஏற்பட என்ன செய்யலாம்?

ப. கறள் பிடித்த கத்தியால் 'ஷேவ் எடுத்துக்கொள்ளலாம்!

இரா. ஈஸ்வரி, கிரிமெட்டியா, கலஹா

கே: கொங்கோவில் கொலையுண்டது ஜனநாயகமா? சர்வாதிகாரமா?

ப. ஜனநாயகம்தான்! கொங்கோ ஜனங்களின் நாயகமாகத்தான் லுமும்பா கருதப்பட்டார்!

அ. தேவசகாயம். நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.

கே: நானும் எனது சிநேகிதனும் எங்கள் பாடசாலை விளையாட்டிடத்திற்குச் சென்று நான் வடக்கு முகமாகவும், சிநேகிதர் தெற்கு முகமாகவும் நின்று, திரும்பாமல் ஒருவரையொருவர் பார்த்தோம். எப்படி?

ப. நேர் எதிராக நின்றிருப்பீர்கள்!

மதியமுதன், சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை

கே. பாரதியைப் போன்ற தேசீயக் கவிஞன் யாரும் ஈழத்தில் உண்டா? பெயரென்ன?

ப, தேசவிடுதலை, சமுதாய முன்னேற்றம். பெண்கள் கல்வி, சமயத் தத்துவம், மொழி வளர்ச்சி முதலிய பல்வேறு துறையைச் சேர்ந்த பொருள்பற்றி ஆயிரமாயிரம் கவிதைகள் பாடியவர் பாரதியார். அவரைப் போன்ற கவிஞர் எவரும் ஈழத்தில் இல்லை என்பது உண்மைதான். ஆனல் நண்பர் பரமஹம்சதாசனின் கவிதைகளைப் படிக்கும்போது எதிர்காலத்தில் ''ஈழத்தின் தேசீயக் கவிஞ'' என்ற பட்டத்தை அவர் பெறுவார் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

கே. சுன்னுகத்தில் என்னைக் கவர்ந்தது இராசவள்ளிக்கிழங்கு, தங்களை......?

ப. அதன்மேலுள்ள செம்மண். ஒவ்வொரு தடவையும் நான் அங்கே செல்லும்போது என் உடையை அந்த வண்ண மண்ணில் தோய்க்காது வரமாட்டேனே!

ந. சரோஜினிதேவி, கல்வியங்காடு.

கே. தங்கள் ''கலைச்செல்வி''யில் வெளியான ''அட அகிலனு'' என்ற துணுக்கிற்கும் 3-10-60 குமுதத்தில் வெளியான ஒரு துணுக்கிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றதே?

ப. அன்பர் இராதாரமணன் 3-10-60 க்குப் பல மாதங்களுக்கு முன்பேயே அந்தத் துணுக்கை இங்கு அனுப்பிவிட்டார். இடவசதியில்லாத படியால் உடனே பிரசுரமாகவில்லை, ஏறக்குறைய ஒரே மாதிரியான கற்பனை ஒரே சமயத்தில் வெவ்வேறு மனிதர்கட்கு ஏற்படலாம் என்பதையே இது காட்டுகிறன்து. ராதாரமணன் திருடரல்ல.

இரா. சிவசந்திரன், வேலணைகிழக்கு வேலணை.

கே. காங்கோவில் நடந்த அக்கிரமங்களுக்கும் இங்கு நடைபெறும் அக்கிரமங்களுக்கும் என்ன வித்தியாசம்?

ப. அங்கே படுகொலை. இங்கே சித்திரவதை,

கே. சென்னையைத் ''தமிழ்நாடு'' என்று அழைப்பதுபோல் நம் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் ''தமிழ்நாடு'' என்று அழைத்தாலென்ன?

ப. இரு வேறு நாடுகளை ஒரே பெயரில் அழைப்பது குழப்பத்தைத் தரும். இலங்கையிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களை ''ஈழத்தமிழகம்'' என அழைப்பது பொருத்தமாயிருக்கும். கடித உறைகளிலும் பத்திரிகைகளிலும் இப்பெயரை உபயோகிப்பதன் மூலம் நல்ல தொண்டு செய்யலாம்.

சு. தியாகராசன், 11வது ஒழுங்கை கொழும்பு.

கே. திரு எஸ். சிவகுமாரன் என்ன செய்கின்ருர்? அவரது முகவரி?

ப. பத்திரிகைத் துறையில் ''டிப்ளோமா'' பட்டம் பெற்றுள்ள அவர் ''சேம்பர் ஒவ் இன்டஸ்றீஸ்'' என்ற நிறுவனத்தில் பணிபுரிகின்ருர். அவருடைய இல்ல முகவரி இது: 117, சுவர்ண சயித்திய வீதி, கொழும்பு 14.

கே, அவர் சுயமான கதைகளும் எழுதியுள்ளாரா?

ப ஆம். இனம் இனத்துடன், இவர்கள் உலகம், வாழ்க நீ தமிழணங்கே, எழுத்தாளன் காதலி, பயறிக் காதலி ஆள் மாருட்டம் ஆகிய ஆறு கதைகளும் இதுவரை வெளியாகியுள்ளன.

ம. இரத்தினசபாபதி, தபாற் கந்தோர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

கே. தாண்டவக்கோனரே! உமக்கு அகில இலங்கை முட்டாள் மன்னன் என்ற பட்டத்தை அளிக்கின்றேன். சம்மதமா ?

ப. சொர்க்கத்தில் அடிமையாக இருப்பதை விட நரகத்தில் அரசனாக இருப்பதை விரும்புகின்றேன் என்று ஒரு அறிஞன் சொல்லியிருக்கின்றான். ஆகவே, உங்களைப் போன்ற பலருக்கு மன்னனாக இருப்பதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது.

கே. விமலா, பேராதனை வீதி, கண்டி

கே. காந்தத்திலும் பார்க்க அதிக கவர்ச்சி உடையது எது?

ப. எங்கள் ஆசிரியருக்கருகேயுள்ள குப்பைக் கூடை! இங்கு வருகின்ற கதைகளையும் கட்டுரைகளையும் ஆசிரியர் தன் கையில் எடுக்க வேண்டியது தான் தாமதம், குப்பைக்கூடை 'டபார்' என்று இழுத்துத் தன்னுள் அடக்கிவிடும்.

ச. சுந்தரமூர்த்தி, டின்ஸ் ரோட், மருதானை.

கே. சினிமாவில் கோவில்கள் காட்டப்படும்போது கையெடுத்துக் கும்பிடுகின்ற கர்நாடகங்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப. சோகக் காட்சிகளில் நாம் கண்ணீர் சிந்தலாமென்றால், பக்திக் காட்சிகளில் ஏன் கையெடுத்துக் கும்பிடக் கூடாது?

குறிப்பு: கீழேயுள்ள முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்புவோரின் கேள்விகள்தான் இப்பகுதியில் இடம் பெறும்.

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி,
சுன்னாகம்.


# கலைச் செல்வி

| | |
|---|---|
| தனிப்பிரதி | 25. சதம் |
| ஆண்டுச்சந்தா (மலருடன்) | 4/- ரூபா |

இந்த இதழ் கிடைத்தவுடன் நேயர்கள் தம் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்வார்களென நம்புகின்றோம்.

நிர்வாகி
**கலைச்செல்வி**
சுன்னாகம்.


# ஆளுக்கொரு தொப்பி

**உரிய நேரத்தில் கையில் கிடைக்காத படியால் ஆளுக்கொரு தொப்பி போடப்படவில்லை!**

ஆசிரியர்.

# அன்னை விலங்கு அறுத்தெறிவோம் வா! வா! வா!

— சி. ஆறுமுகன் —

செந்தமிழெம் அன்னைமொழி — சொல்! சொல்! சொல்!
சேர்ந்தவளைக் காத்திடவே — செல்! செல்! செல்
செந்தமிழெம் சொந்தமொழி — சொல்! சொல்! சொல்!
திரண்டவளைக் காத்திடவே — செல்! செல்! செல் !

அன்னைமொழி காத்திடுவோம் — வா! வா! வா!
அரியணையில் ஏற்றிடுவோம் — வா! வா! வா!
இன்னல்வரின் ஏற்றிடுவோம் — வா! வா! வா!
எந்தமிழைக் காத்திடவே — வா! வா! வா!

அடிமையிருள் அகற்றிடுவோம் — வா! வா! வா!
அன்னைபணி போற்றிடுவோம் — வா! வா! வா!
மடிமையிருள் போக்கிடுவோம் — வா! வா! வா!
மானமுடன் வாழ்ந்திடுவோம் — வா! வா! வா!

செந்தமிழின் காவலர்கள் — யார்? யார்? யார்?
செப்பிடுவீர் தொண்டரினம் — தாம்! தாம்! தாம்!
முந்துதமிழ் காத்திடுவோம் — நாம்! நாம்! நாம்!
முன்னணியில் நின்றிடுவோம் — நாம்! நாம்! யாம்!

அச்சம்என்ப தணுவுமின்றி — வா! வா! வா!
அன்னைவிலங் கறுத்தெறிவோம் — வா! வா! வா!
நிச்சயமா வெற்றியுண்டு — வா! வா! வா!
நெஞ்சிலன்பு நீதிகொண்டு — வா! வா! வா!

தேமதுரச் செந்தமிழா — வா! வா! வா!
திரண்டெழுந்து வீறுகொண்டு — வா! வா! வா!
சேமமுடன் தமிழ்விளங்கும் — வா! வா! வா!
செப்பும் அறப்போரில் வெற்றி — வா! வா! வா!

# ரூபா, நாவல்போட்டி

1. இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முதன் முதலாக நடாத்தப்படும் இந்த நாவல்போட்டியி ல்இலங்கையிலுள்ள சகல எழுத்தாளர்களும் பங்கு பற்றலாம்.

2. நாவல் இலங்கையை நிலைக்களனாக வைத்தே எழுதப்பட வேண்டும். இலங்கை மக்களுடைய பண்பாடு, பழக்கவழக்கம், சூழ்நிலை, இலட்சியம் முதலியவற்றை நாவல் பிரதிபலிக்க வேண்டும்.


3. மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இராமல் எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். ஏற்கனவே அச்சில் வெளியான நாவல்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

4. நாவல் "கலைச்செல்வி"யில் 125 பக்கங்கட்குக் குறையாமலும் 200 பக்கங்கட்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.

5. நீதிபதிகளாகப் பின்வருவோர் கடமையாற்றுவர்:- திருவாளர்கள். அகிலன், இராஜ அரியரத்தினம். க. கைலாசபதி, S. T. சிவநாயகம், கலைச்செல்வி ஆசிரியர்.

6. நாவல்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி:
30-6-1961

காணியை மீட்க அவனால் முடியவில்லை. காதலித்த கன்னியையாவது மீட்க முடிந்ததா?



"எனது வாழ்க்கையிலேயே நான் இப்படி யாரிடமும் வாய் திறந்ததே கிடையாது, முதன் முதலாக உங்களிடம்தான்." மழையை நோக்கித் துவளும் குஞ்சு வேளாண்மைபோல குழைவுக்கோடுகள் என் முகத்திலே படர்ந்ததை அவர் பார்த்திருக்க வேண்டும்.

ஓர் அசட்டைச் சிரிப்பு! ஏளனம் தொனித்தது. சொன்னார்; "இருக்கும்; இருக்கும். இப்போது தானே வாழ்க்கையின் முதற்படியிலே கால் தூக்கி வைக்கிறீர்கள். இனித்தான் அனுபவப்பட வேண்டும்."

என் கஷ்டத்தை அவரால் உணர முடியவில்லை. உணரவும் முடியாது. அதை உணர அவருக்கென்ன அக்கறை?

தன் சுய கௌரவத்துக்குள்ளே என்னையும் இழுத்துப் போட்டுக் கொண்டு புராணத்தைத் தொடங்கி விட்டார்.

"பாருங்கோ தம்பி, நான் 'நாகமத்திலே' இருக்கும்போது எனக்குக் கீழே பத்தொன்பது வாத்திமார். கல்வி மந்திரி வந்து, என்தோளிலே தட்டிவிட்டுப் போனான். அத்தனை பேரையும் வைத்து வேலை வாங்கிய எனக்கு இவன் பொன்னையா வந்து சட்டம் படிப்பிக்கிறான்."

"அப்போ வெயிலேறுகிறது. நான் வந்த விஷயம்......"

"எனக்கும் வெயிலெண்டா, கொல்லக் கொண்டுபோற மாதிரி. மழையிலேயெண்டா நல்லா நனை வேன். நாகமத்திலே பார் தம்......"

மீண்டும் அதே பாரதம். ஐயோ ஆண்டவனே! ரோம் பற்றி எரியும் போது நீரோமன்னன் பிடில் வாசித் தானும்! — யாரோ எழுதிய சினிமா வசனம் சிந்தையைத் தொட்டுவிட்டு விலகிக்கொண்டது. எனக்குத் தெரி யும் என்வேதனை! இந்தப் புராணத் தைக் கேட்கவா இங்கே வந்தேன்? காலையிலே வந்து கழுத்திலே கத்தி வைத்துவிட்டுப் போகிறானே 'பிஸ் கல் உடையான்.'

நாளை 20ந் திகதி. நாளையோடு அவனைக் கெஞ்சி, மன்றாடி, அழுது, மண்டியிட்டு மூன்று பச்சை நோட் டுக்கும் அழுதுமுடிந்த 'கெடுவு' முடி கிறது. காலையிலே பொழுது புலரு முதலே 'சைக்கிளிலே' வந்திறங்கி விட்டான் அந்தமனிதன்!

அவனுக்கென்ன தலையெழுத்தா இது? இத்தனை காலத்துக்கும் நல்லாக நம்மோடு வாழ்ந்துவிட்ட தோஷம்!

"விதானையார்! எனக்கேன் விதானையார் இந்தத் தலைவலி? உங்கட அருமைக்காக இவளவும் செய்தேன். இந்தக் 'கெடுவு'க்கும் அவனுட்ட கையொப்பம் வாங்க எவ்வளவு கஷ்டமாப்போச்சி! அவன் 'பெருக்கிளாசி' 'ராசா'; நான் கடமை செய்யல்லையாமெண்டு சண்டைக்கு வாறான். விதானையார்! இனி, என் னைக் குறை சொல்லாதீங்க, நான் வாறன்."

'பிஸ்கல்' உடையான் போய்விட் டான், அவன்தான் என்ன செய் வான்? நம்மோடு பழகியதற்காக இந்தக் 'கெடுவையும்' எடுத்துத் தந்தான்.

பெருமூச்சு விட்டுவிட்டு நான் பாடசாலைக்குப் புறப்பட்டேன்.

"தம்பி!" என்றார் அப்பா.

"உங்க, தலமை வாத்தியாருட்ட கேட்ட விஷயம்?"

"ஐயாயிர மெண்டதும் கையை விரிக்கிறார். ஆருட்டையோ கேட்டா ராம், சாயந்தரம் வீட்டுக்கு வரச் சொன்னார். போகவேணும்."

"நாளையோட கெடுவு முடியுது தம்பி. அவன் பறையனைக் கொண்டு விட்டு அடிக்கிறதைப் பார்த்துத்து இருக்கிறதைப் பார்க்கிலும்; ஊரை விட்டே ஓடவேண்டியதுதான். வயலை யும் விதைச்சுப் போட்டோமே!......"

நான்கு வருஷத்துக்கு முன்னே இந்த ஊரையே ஆட்டுவித்த விதா னையார்; அந்த ஊரையே விட்டு ஓடும் நிலை.

ஆண்டவா! பொல்லாததுதான் இந்தக் கடன் பழு.

இந்தக் கடன்பழு, இந்த வாத்தி யாருக்கு முன் — அவர் வீட்டுக்கே இழுத்து வைத்து — அவர் சுய புரா ணத்தைக் கேட்கவைத்திருக்கிறதே!

ஒரு முறையா? இருமுறையா? இத்தோடு எட்டாவது முறை!

"கேட்டாயா தம்பி. நான் எங்கே விட்டேன்? நாகமத்திலே; அந்தச் சோனகப் பொடியன்; நானே வளர்த்து; நானே படிக்க வைத்து; நானே வாத்தியாக்கிவிட்டு; நானே கலியாணமும் முடிச்சுவச்ச அவன். கடைசியில் எனக்கு மாறாகப் பெட் டிசம் போட்டான். பார்தம்பி......"

போதும் போதும். எனக்கு எரிச்சலாகவே வந்தது. எழுந்துவிட்டேன்.

"என்ன தம்பி எழுந்திட்டயள்?"

"மணி இரண்டாகிறது. நான் போய் வருகிறேன். நீங்கள் தான் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறீர்களே!"

"அந்தக் காசு விஷயந்தானே! அது தம்பி என்னிட்ட இருந்தாத் தரமாட்டேனு? அக்காவிட்டயும் கேட்டன். அங்கயும் காசில்ல. அண்ணனுட்ட காசிருக்கு. அவரோட நான் பேசிறதில்ல......"

"பேசிறதில்லையா? அப்போ ஆரைப் பிடிச்சுக்கொண்டு போகலாம்?......ம்..."

"நமது வாத்தியார் ரத்தினம், அவரொட நல்லாப்பு"

"சரி நான் வாறன்..."

அப்போதைக்கு எப்படியோ தப்பினல் போதுமென்ருய்விட்டது.

∴ ∴ ∴

"மாஸ்டர்! இதுதானு வீடு?"

"ஓம் கதவு பூட்டிக்கிடக்கு......" இரத்தினம் கதவைப் பலமுறை தட்டிய பிறகு அது மெதுவாகத் திறந்து கொண்டது. ஒரு பத்து வயதுப் பையன் தலையை நீட்டினன்.

"ஐயா இருக்கிருரா தம்பி......" —இரத்தினம்.

"நில்லுங்க வாறன் ........"— பையன்.

பையன் அரைமணித்தியாலத்தின்பின் திரும்பி வந்தான்.

"உள்ளுக்கு வந்து இருங்க; அவர் நாய்க்குக் குளிப்பாட்டுகிருர்."

இருந்தோம், ஒரு மணி நேரமாக இருந்தோம் என்னேடு சேர்ந்து வந்ததால்; பாவம், மாஸ்டர் இரத்தினத்துக்கும் இந்த விதி!

ஒன்றரை மணித்தியாலத்துக்குப் பிறகு அந்தக் கொடைவள்ளலிடமிருந்து கிடைத்த பதில் இது:

"நான் தங்கநகைக்கு மாத்திரம் தான் காசு குடுக்கிறன். அதுவும் இவளவு காசு என்னிட்ட இல்ல. ஏன்; உங்கள இங்க வரச்சொன்ன வாத்தியாரிட்டயே காசு இருக்கே! அவருட அக்காவுட்டயாவது வாங்கித் தரலாமே! போயிட்டு வாங்க"

பாவம்; நாங்கள் அந்த ஒன்றரை மணித்தியாலமும் இருந்ததால் அந்தச் சீமானுககு ஒரு சோடா புட்டி; நான்கு பீடி; இரண்டு சிகரட் இவ்வளவும் நட்டம்!

"என்ன செய்வோம் மாஸ்டர்?" இரத்தினம் என்னைக் கேட்டார்.

"வந்துவிட்டோம்; 'கெட்மாஸ்ட' ருக்கும் தலையைக் காட்டிவிட்டுப் போவோம்."

∴ ∴ ∴

அங்கே; தலைமை வாத்தியார் நகைகளை நிறுத்துக்கொண்டிருந்தார். அடைவு பிடித்த நகைகளாயிருக்கலாம்.

காகம் அபிஷேகம் செய்துவைத்திருந்த நான்கு கதிரைகள்! ஒன்

றில் நான் குந்தினேன். இரத்தினம் நிலத்திலேயே இருந்துவிட்டார்.

நகைகளை நிறுத்து முடித்துவிட்டார் போலிருந்தது. குழந்தைக்குக் குளிப்பாட்டி மனைவியிடம் கொடுத்துவிட்டு எங்கள்பக்கம் திரும்பினர்.

''எனக்குத் தெரியும் இன்றைக்கு வருவீர்களென்று. போன விஷயம் காயா பழமா?"

''கன்னிகூடக்கட்டவில்லை, காயாவது பழமாவது!" என்றேன் நான். இரத்தினசிங்கம் நடந்ததை விபரித்தார்.

''நான் இனிப் புறப்படுகின்றேன்'' நான் எழுந்தேன்.

''கொஞ்சம் பொறுதம்பி இந்தா வந்துட்டன்." எனது சைக்கிளைத் தள்ளிக்கொண்டே பாய்ந்து விட்டார் மனிதர். இனியென்ன செய்வது? வரும் வரைஇருக்கவேண்டியதுதான். அவர் தனது அலுவல்களையெல்லாம் முடித்துக்கொண்டு திரும்புமபோது மணி இரண்டு. வயிறு கிள்ளத் தொடங்கியது.

''தம்பி! இளையம்பியண்ணனைத் தான் பார்க்கப் போனன். ஆளில்ல. ஆள் வரங்காட்டிலும் இருங்க பார்த்துட்டுப் போகலாம். படுவான் கரைக்குத்தான் போனதாம்"

எனக்கு அலுத்துவிட்டது. மனிதர் புராணத்தை ஆரம்பிக்குமுதல் எதையாவது சொல்லித் தப்பித்து விடவேண்டும்.

''அவர் எப்போ வருகிருரோ? நான் நாளைக்கு வருகிறன்" அவரின் பதிலுக்காக நான் காத்திருக்கவில்லை. படலையை நான் தாண்டும்போது ஒரு கலகலப்பு—கண்ணாடி வளையல்களின் ஒலி அந்தச் சாளரத்தினூடாக இரண்டு கருவிழிகள் நோக்கிப் பெருமூச்சு விட்டிருக்க வேண்டும். நான் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

இனிமேல் இந்த மனிதரின் வாசற்படியே மிதிப்பதில்லை. எத்தனை நாளைக்குத்தான் இந்த நாய் அலைச்சல்?

ஆரம்பத்திலே நான் கேட்டபோதே வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லியிருந்தால் பாதகமில்லையே! பார்ப்போம் என்ருர். வட்டியையும் சொன்னுர். ஈடாக, எழுத முடியாது கிரயமாக எழுதவேண்டும் என்ருர். 'எந்த இழவானுலும் சரி விஷயம் முடியட்டும்' என்றேன் அடுத்தநாள் 'என்னிடமில்லை தம்பி அக்காவிடம் கேட்கிறேன்' என்ருர் அதற்குமடுத்தநாள் 'அக்காவிடமுமில்லையாம் வேருெருவரிடம் கேட்டுப் பார்க்கிறேன்" என்ருர். இன்று "இளையம்பியண்ணரிடம் கேட்கிறேன், நாளைக்குவா"

ஐயாயிரமென்ருல் சாதாரணமா? யாரிடம் எடுப்பது? மிதிக்கக்கூடாதென்று நினைத்து நேற்றே ஒதுக்கிவிட்ட அதே வாசற்படியை இன்றும் மிதிக்கிறேன். ஒருவேளை அந்த இளையதம்பியண்ணர் இணங்கிவிட்டால்?......

கதவைத் தட்டினேன். தாமதமில்லாமலே திறந்துகொண்டது. அவள் தான் நின்றிருந்தாள் — பரிமளா!

''அப்பா புளியந்தீவுக்குத்தான் போனவர். அம்மாவுமில்லை."

''அப்போ நான் வருகிறேன்." எழுந்துவிட்டேன்.

"நீங்க இப்போதெல்லாம் ஏன் இப்படி?" தொண்டை கரகரக்கக் கேட்டாள். நிமிர்ந்து நோக்கினேன்

தூணோடு சாய்ந்து நின்றிருந்த வளின் இரு விழியோரங்களிலும் இரு பனித்துளிகள் மின்னின.

ஆமாம் இப்போதுதான் நான் இப்படியிருக்கிறேன். இதற்கு முதல் சிரித்துச் சிரித்து அவளோடு நான் பேசவில்லையா? என் எதிர்கால வாழ்க்கைத் திட்டத்தையே வகுத்துக் கொள்ளவில்லையா?

இவளென்ருலென்ன அப்பாவின் மகள்தானே! அப்பாவைப்போல ஒரு நாள் என்னையும் ஏமாற்றத்தான் போகிருள். அவரிடம் நானென்ன பிச்சையா கேட்டேன்? வட்டி, அது வும் மாதாமாதம் சம்பளத்திலே தரு கிறேனென்றேனே! ஒரு மூன்றுவரு ஷத்திலே முதலேயே தீர்த்து விடு வேன் என்று கெஞ்சினேனே! தன் னிடமே இல்லையாம். நெஞ்சார ஏனிந்தப் பொய்? நினைத்திருந்தால் இவளால் ஆகாததா? சொல்லி வாங்கித்தந்தால் கொள்ளையா அடித்து விடுவேன்? பாம்பின்குட்டி பாம்புதானே!

"கல்யாணப் பேச்சு நடக்கிறது"

"நல்லதுதானே!" நான் எங்கோ பார்த்தபடி கூறினேன். அவள் பேச வில்லை, விசும்பல் கேட்டது.

"ஏன் அழவேண்டும்? பணக்கார இடம் தானமே! பணத்தோடுபணம். அதுதான் சரி."

அவள் விசித்து விசித்து அழு தாள்.

"இதயத்தில் கொஞ்சம்கூட அன்பில்லையா? என்னை ஏனிப்படி சொல்லாலே கொல்லவேணும். நான் என்ன குற்றம் செய்தேன்?"

நான் விரக்தியோடு சிரித்தேன்; வேதனையை இதயக் கல்லின் அடி யிலே புதைத்துக்கொண்டு.

"குற்றம் செய்தால்தான கல்யா ணம் நடப்பது? கடன்கார அப்பா வுக்கு மகளுகப்பிறந்தது என்குற்றம்."

'இப்படி ஏன் வேறுவேருக்கிப் பேசுகிறீர்கள்? என்னைக் குழியிலே தள்ளப்போகிருர்களே! உங்களுக்குச் சந்தோஷமா? [அடுத்த இருபதாந் திகதி நாள்கூடக் குறித்துவிட்டார் கள்!"

"அடுத்த இருபதா?" நான் நினையாமலே பறந்த வார்த்தை இது. ஆம். அன்றுதான் ஏல விற்பனவு. நான் பிறக்குமுதற்கொண்டே செய்து வந்த அந்தப் பதினைந்து ஏக்கர் நிலம் அன்று விற்பனவு. பறையன் அடிக்கிருன். விலை வைக்கப்படுகிறது. .. ......மானத்தோடு வாழ்ந்தோமே! கண்முன்னே வேருருவன் அந்தக் காணியை வாங்கிச் செய்யப் போகி ருன்! பார்த்துக்கொண்டா வாழ்வது? அப்பா! நான் உயிரோடிருந்தும் உங்களுக்கு இந்த நிலையா? மான மழிந்தபின்பு வாழாமை முன்இனிது என்று உங்கள் இதயம துடிக்கும் துடிப்பு என்னை வதைக்கிறதே! பேரும் புகழும் இருந்தென்ன? ஒரு ஐயாயிர ரூபாய்க்கு என்னை யாரும மதிக்கவில்லையே!—நம்பவில்லையே!

"ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்? நீங்கள் எங்கு அழைக்கிறீர்களோ அங்கே வர நான் தயார். அதன் பின் அப்பா தாகைச் சரியாய் விடு வார்......"

ம்... பைத்தியக்காரப் பெண். இதைத்தாத நான் சிந்திக்கிறேன்.

அப்பாவைப்போல சுய நலக்காரி. என்னைப்பற்றிக் கொஞ்சங்கூடச் சிந்திக்கிறாளா? அவளின் இந்தக் குரூரத்தைப் பேச்சைக்கேட்க ஒருபுறம் பரிவு. அதற்கிடையில் பற்றும் நெருப்பு.

"பரிமளா! உனக்கு நான் எனக்கு நீ என்றொரு காலமும் இருந்ததுதான். அது காலத்தின் தவறல்ல. எனது தவறு. அந்தத் தவறை உணர்ந்துகொண்டேன். இனி நான் தவறப்போவதில்லை. நான் கடன்காரன். வருகிறேன்—இல்லை. போகிறேன்."

அவள் படலைவரை ஓடிவந்தாள். என்காலைப் பிடித்து மண்டியிட்டாள்; கதறினாள். இதயத்தை வலிந்து வலிந்து, கல்லாக்கிக்கொண்டு உதறித் தப்பித்துக்கொண்டு ஓடிவந்து விட்டேன். துடித்திருப்பாள். புழுவாய்த் துடித்திருப்பாள்.

⁂ ⁂ ⁂

தேதியை ஒவ்வொன்றாகக் கிழித்தெறிந்துவிட்டேன். இன்று அந்த இருபது. இப்போது மணி எட்டரை. தலைமையாசிரியர் கல்யாணத்துக்கு 'லீவு' போட்டிருக்கிறார். பதில் தலைமையாசிரியர் நான். இன்னும் முப்பது நிமிடமிருக்கிறது. ஒரேயொரு முப்பது நிமிடமிருக்கிறது. அப்புறம்? எங்கள் நெற்காணி,—குடலையும் கதிருமாகக் குலுங்கும் எங்கள் பதினைந்து ஏக்கர் பூமி யாருக்கோ சொந்தமாகப் போகிறது. அதுமட்டுமா? எனக்கென்றே பிறந்த இன்னுமொரு சொத்து — என் பரிமளா யாருக்கோ சொந்தமாகப் போகிறாள்.

ஆ! ...... மணி ஒன்பது ...... அதோ பறையன் அடிக்கிறான்! எங்களுக்கன்றி யாருக்குமே சொந்தமாகாமலிருந்த அந்த வயல் பதினைந்தேக்கர் நிலத்துக்கு எவனையோ உரித்தாக்க இத்தனைபேர் கூடிவிட்டார்கள்.... அப்பா! அப்பா!...... பரிமளா இந்த மேளம் உன்வீட்டிலேதான். ஆம், அதோ அந்த நாதசுர ஆலாபனை! பரிமளா! நீ யாருக்கோ கழுத்து நீட்டுகிறாய். அந்தத் தாலியால் உன்னை யாரோ ஒருத்தன் சொந்தமாக்கிக் கொண்டான். இந்த ஐயாயிர ரூபாய்ப் பணத்தால் நிறைகுடலையாயிருந்த எங்கள் வயலை யாரோ பிடுங்கிக் கொண்டுவிட்டான்!

கடன்காரன்! நான் கடன்காரன்! என் அப்பன் என் பாட்டன் எல்லாருமே கடன்காரர். பரிமளா! என் வகுப்புப் பிள்ளைகளே என்னை வெறித்துப் பார்க்கிறார்கள். பரிமளா! நான் கடன்காரன். என் இதயத்தை உன்னிடம் அடகு வைத்துவிட்டு நீ தந்த இதயத்தை உன்னிடம் திருப்பித்தர முடியாத கடன்காரன்......... கடன்...காரன்!...

## அடுத்த இதழில்

பண்டிதமணி அவர்களின்

**"தலைப்பட்டான் நங்கை"**

ஆரம்பமாகின்றது.

நெஞ்சிலே ஒருவனை நிறுத்தினாள். நிஜ வாழ்க்கையில் வேறொருவனுக்கு மாலையிட்டாள். நெஞ்சில் இருந்தவன் நேரில் தோன்றினான். பின், உணர்ச்சிக் குமுறல், கோபப் புயல், சந்தேகச் சூறாவளி! முடிவு...! ரஸமானது!

# பெண்ணிற் பெருந்தகை...

## — மணிவாணன் —

எவ்வளவு பயங்கரமான நினைவு. இப்போது, அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதிருந்தது. எவ்வளவு தான் கஷ்டம ஏற்பட்டாலும் இப்படியான நினைவா வரவேண்டும். அப்பா; என்ன கோர நினைவு, "கொந்தளிக்கும் கடல்; வாழ்வுக்கு அஞ்சிக் கடலைத் தஞ்சமடையும் நெஞ்சுறுதியற்ற நான்; என் தினகரன் இதனை அறிந்தால்?.......... திரும்ப அதனை நினைப்பதே அவளுக்குப் பயங்கரமாக இருந்தது.

பாவம்! அவள் தான் என்ன செய்வாள். இயற்கையின் கோரப் பிடியிலே சிக்கி, இதயத்திலே ஒருவனும், வாழ்விலே இனனொருத்தனுமாக இதுகால வரையும் வாழ்வை ஓட்டியது அவளது குற்றமா? அல்லது இயற்கையின் குற்றமா?

இயற்கை அவரவர்க்கு உரிய பருவத்தில் உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கிக் காதலை வளர்க்கின்றது. அதே காதலை எரிமலைப் பிழம்பாக்கி ஒருத்தரை ஒருத்தர் அணுகவொட்டாது தடுத்து நிறுத்துவதும் இயற்கையின் கட்டுக் கோப்புக்கள் தானே.

∴ ∴ ∴

மேற் படிப்புக்காகப் பாரதம் சென்றாள் பார்வதி. அவள் சென்ற கல்லூரியில் தன் தாய்த் திருநாட்டின் புதல்வன் ஒருவனைக் கண்டாள். அவன் பெயர் தினகரன். நாம் ஈழநாட்டவர் என்ற பற்றுதல் அவர்களிருவருக்கும் உண்டாகியது. பார்வதிக்குத் தினகரனும், தினகரனுக்குப் பார்வதியுமே உறவினர், உற்றார், சொந்தம் பந்தம் யாவும்.

தாய்நாட்டுப் பாசத்தில் ஒருவர்க்கொருவர் உறுதுணையாகிப் பழகிய இருவரையும் இயற்கை பிணைத்தது. தினகரனது ஆழ்ந்த அறிவும், உயரிய சிந்தனையும் பார்வதியை மாத்திரமன்றிப் பூனா சர்வகலாசாலைப் பேராசிரியர்களையுமே கவர்ந்திருந்தது. ஈழத்தின் எதிர்காலச் சிற்பி ஒருவனைத்

தாம் தயார் செய்வதாகவே பேராசிரியர்கள் கருதினர்.

படிப்பு முடிந்தது. பட்டங்களைச் சுமந்துகொண்டு ஈழத்து மண்ணில் கால் வைத்தனர் பார்வதியும் தினகரனும். பார்வதி வண்ணார்பண்ணையையும் தினகரன் இணுவிலையும் தாயகமாகக் கொண்டவர்கள். கலாசாலை வாழ்வைப்போலன்றி அவர்கள் எப்படியும் பிரிந்தேயாக வேண்டும். இது இயற்கையின் நியதி.

காலச்சக்கரம் சுழன்று கொண்டேயிருந்தது. தினகரன் ஓர் சாதாரணப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுந்தான். தன் சிந்தனைகளை ஒழுங்குபடுத்திப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், கதைகள் எனப் பல வடிவில் எழுதி வந்தான்.

இவர்களிருவரும் இடைக்கிடை ஒருவரை ஒருவர் சந்திப்பதும் கடிதமூலம் செய்தி தெரிவிப்பதுமாகக் காலத்தைக் கழித்தனர். பார்வதி ஈழநாட்டின் வளமைப்படி உயர்சாதியைச் சேர்ந்தவள் என்பதை அறிந்ததும் தினகரன் திடுக்கிட்டான். தாம் கட்டிய இன்பக் கோட்டைகள் யாவும் மணல்விடாக முடிந்துவிடுமோ என அஞ்சினான். அஞ்சியது நடந்தேவிட்டது. ஆமாம் பார்வதிக்கு மணம் முடிந்தது. அவள் கணவன் தினகரனல்ல; றெயில்வே அதிகாரி சிதம்பரநாதன். தினகரனுக்கும் தனக்கும் மணம நடப்பது சாத்தியமானதல்ல என்பதைப் பார்வதி நன்ருக உணர்ந்திருந்தாள். தன பெற்ருேரின் மகிழ்ச்சிக்காகவாவது தான் வாழவேண்டும் என்ற கடமை உணர்வு சிதம்பரநாதனை மணம் முடிக்க அவளை இசையச் செய்தது.

அவளது வாழ்வின் ஒரு வருடம் கண்ணீருடன் கழிந்தது. இக்காலத்தில் பார்வதியால் தினகரனைப் பார்க்காது இருப்பது முடியாத காரியமாக இருந்தது. ஆனல் பார்வதியைப்போல் தினகரன் சோர்ந்து விடவில்லை. தன் துன்பத்தைப் போக்குவதற்காகப் பேனவிடம் தஞ்சம் புகுந்து ஓயாது எழுதிகொணடேயிருந்தான்.

தினகரன் அடிக்கடி பார்வதியிடம் வந்து போய்த் திரிந்தான். சில வேளைகளில் சிதம்பரநாதனும் இவர்களுடன் சேர்ந்து பல உலக விவகாரங்களைத் தம் முன் வைத்துச் சர்ச்சை செய்வர். அந் நேரத்தில் பாரதியைப் பற்றியோ, அல்லது பாரதிதாசனின் கவிதைகளைப்பற்றியோ பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றியோ ஏதாவது ஓர் கதை வந்தால் ஏதாவது ஓர் சாக்கைச் சொல்லிச் சிதம்பரநாதன் சென்று விடுவார். பிற்பாடு பார்வதியும் தினகரனும் இலக்கிய வானில் சிறகுகட்டிப் பறந்து செல்வார்

கள். அதில் ஏற்படும் இன்ப உணர்ச்சி தினகரன் பிரிவால் நிலைத்து நிற்பதில்லை,

காலம் ஓடியது. தினகரன் தன்வீட்டுக்கு வந்துபோவதால் பார்வதிக்கு வாழ்வில் ஓரளவு பிடிப்பு ஏற்பட்டது எனலாம்.

பார்வதி ஓர் ஆண்மகவுக்குத் தாயானள். சிதம்பரநாதனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. அது நிலைத்து நிற்பதற்கிடையில் எங்கிருந்தோ கடும்புயல் வீசியது. சமூகத்தின் கண்ணுக்குப் பார்வதியின் குழந்தைக்கும் தினகரனுக்கும் ஒற்றுமையிருப்பதாகத் தெரிந்தது. சிதம்பரநாதனும் இதனை நம்பினன்.

ஏடுகள் புரண்டன. அத்தியாயம் மாறியது. சிதம்பரநாதனிடம் முன்னரே ஓரளவு குடிப்பழக்கமுண்டு. இப்போது அது உச்சநிலையை அடைந்து வீட்டை மறக்கச்செய்தது. சில சந்தர்ப்பங்களில் சிதம்பரநாதன் வீட்டுக்கு வராமலிருப்பதே நல்லதுபோல் தோன்றும் பார்வதிக்கு. அவள் அவ்வளவுக்குத் துன்புறுத்தப்பட்டாள்.

∴ ∴ ∴

அன்று தற்செயலாகத் தினகரன் பார்வதி வீட்டுக்கு வந்தான். வந்தவன் பார்வதியின் சோக உருவைக்கண்டு திடுக்கிட்டான். வாழ்க்கையில் அலுத்துவிட்ட அவளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்த சமயம் சிதம்பரநாதனும் அங்கு வந்து சேர்ந்தான். தினகரனுக்கும் சிதம்பரநாதனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம், கைகலப்பில் முடிந்தது. இடையில் நின்ற பார்வதியும் சிதம்பரநாதனின் அடி உதைக்கு ஆளானுள். குழந்தை குமார் வீறிட்டு அழுதான். பாவம் அக்குழந்தைதான் என்ன பாவம் செய்ததோ! அவ்விரக்கமற்ற நீசன் அக்குழந்தையையும் தூக்கி எறிந்தான். பார்வதி ஓடிச்சென்று குழந்தையைக் காப்பாற்றிக்கொண்டாள். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குப் பின் சிதம்பரநாதன் அங்கு நிற்கவில்லை. எதுவித சந்தர்ப்பத்திலும் கலங்காத தினகரன் அன்று கண்ணீர் விட்டான். "பார்வதி தைரியமாயிரு எதுவித சந்தர்ப்பத்திலும் மனத்தைத் தளரவிடாதே" என்று தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கூறினன் தினகரன்.

தினகரனும் வீட்டைவிட்டுப் போனதும் அவளால் நிம்மதியாயிருக்க முடியவில்லை. "வாழ்வு ஒரே துன்பமயமாக இருந்தால் எப்படித்தான் அதனைச் சகித்து வாழமுடியும். துன்பத்திற்கும் எல்லையுண்டல்லவா? ஆமாம்; அதோ! கொந்தளிக்கும் கடல். அது என் துன்பமெல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளட்டும். பால் மணம் மாருத பச்சிளம் குழந்தை?... தினகரன்?...... "பார்வதி மனத்

தைத் தளரவிடாதே'' என்ற அவனது குரல் திரும்புமிடமெங்கும் எதிரொலித்தது.

அவள் குழந்தையைக் கவனித்துக்கொண்டிருந்தாள். யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தாள். தினகரன் ஓர் காகிதத்தை அவளிடம் கொடுத்தான்.

அன்புள்ள தினகரனுக்கும் பார்வதிக்கும்,

யான் உங்களைக் கொடுமைப்படுத்தியதற்கு மன்னிப்புக் கேட்கின்றேன். தினகரன் பார்வதிக்குக் கடைசியாக எழுதிய கடிதம் ஒன்றைப் பார்வதியின் பெட்டியிலிருந்து எடுத்து நான் பார்த்தேன். நீங்கள் இருவரும் முன், காதலர்களாக இருந்ததை நான் அதிலிருந்து அறிந்துகொண்டேன். எனக்குத் தெரியாமல் தப்பு நடந்துவிட்டது. மிக்க வருத்தமடைகின்றேன். நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து சந்தோஷமாக வாழுங்கள். இனியும் உங்களுக்கு வாழ்வு உண்டு. நான் தற்கொலை செய்துகொள்ளுகின்றேன். அதற்கு யாருமே காரணமல்லர்.

தினகரனுக்கு :-

என்னை மன்னித்துக்கொள். சமூகத்தால் நேரக்கூடிய அவமானங்களைப் பொருட்படுத்தாது பார்வதியை மணந்து கொண்டு சந்தோஷமாக வாழுங்கள். என்னைத் தேடுவதால் எதுவித பிரயோசனமுமில்லை.

சிதம்பரநாதன்

கடிதம் தினகரனது வீட்டில் அவர் கொண்டுபோய்க் கொடுத்ததாகத் தினகரன் கூறினான். பார்வதி கோவென்று கதறியழுதாள். அங்குமிங்கும் ஓடினாள். பிரயோசனம் ?...

நாட்கள் சென்றன. அறிவிக்கவேண்டிய இடங்களுக்கெல்லாம் அறிவித்துச் சிதம்பரநாதனைத் தேடிக் களைத்துப்போய் பார்வதியின் வீட்டுக்குச் சென்றான் தினகரன். 'அண்ணா' என்று கதறியபடி பார்வதி அவனை வரவேற்றாள். தினகரன் அவளது கோலத்தைப் பார்த்தான். தூயவெள்ளைச் சேலையுடுத்தித் தோற்றமளித்தாள் அவள். அவளது மஞ்சள் கயிறு ?...

தினகரனுக்கு ஏற்பட்ட சிறிதுநேரச் சபலத்திற்கிடையில், ''பெண்தெய்வம்'' என்ற சொல் அவனது அடித்தொண்டைக்குள் ஒலித்தது.

# FANCY PALACE

## THE HAPPY PALACE
WITH
## HAPPY GIFTS

- றோயல் தலைமுடிகள்
- றோயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனாக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்
**ஏக விநியோகஸ்தர்கள்**

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்
பலவிதமான

## பரிசுப் பொருட்களை
**விசேட தினங்களில்**

உங்கள் உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,
பேனா நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware    போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

கலஹாவைச் சேர்ந்த "நர்மதா" புதிய எழுத்தாளர். சுகமான நடையும் சோகமான நிகழ்ச்சியும் கதையிலுண்டு. எழுத்துலகில் இவரது எதிர்காலத்தைக் "கண்ணுடி" மூலம் பார்க்கலாம்.

# கண்ணுடி

## நர்மதா

அகன்ற வானம், அதன் நீலநிற மேனியை மூடிமறைக்க யத்தனிக்கும் கருநிறப் போர்வை.

மனித இனத்திடையே புலமையையும், பூம்பொழில் கற்பனைத் திறனையும் ஊட்டி வளர்க்கும் அந்த ஆகாயத்திடையில்—அடர்ந்து பொங்கும் மரங்கள், செடிகள், கொடிகள் ஆங்காங்கே காணப்படும் அழகிய குடிசைகள். வீடுகள் பங்களாக்கள் இத்தனை இயற்கை யழகொடு அத்தனை உலக அழகுக்களையும் திரையிட்டுக்கொண்டிருந்த கறுப்புக் கண்ணுடி தொப்பென்று கீழே விழுந்து நொறுங்கி விட்டது. எழிலை ரொம்பவும் ரசித்து விட்டதன் பலன். 'பிரேமி'லிருந்து அகற்றப்பட்ட ஒற்றைக் 'கூலிங் கிளாஸ்', தனது ஆயுளைத் தீர்த்துக் கொண்டது. இந்தக் கண்ணுடி நொறுங்கியதில் நான் நடுங்கிவிட்டேன். இழப்பின் பேரிழப்பு. அந்தக் கூலிங் கிளாஸ் என் மனத்தின் திருவுரு. உடைந்து சிதறிக் கிடக்கும் அந்தத் தூள்களை என் இரு கைகளாலும் வாரியெடுத்தேன். ஏந்திய கரங்களும் நடுங்கவாரம்பித்தன. உடல் பொருள் ஆவி அத்தனைக்கும் இன்பமளிக்கும் ஒரு அரிய பொருளின் அழிவை எப்படித் தாங்குவது? அவற்றைத் தூக்கிக் கண்களில் பொத்திக்கொள்ள வேண்டும்போலிருந்தது. முதன் முறையாக அழுது புலம்பினேன். கண்ணீர் வெள்ளம் மாலைமாலையாக மாறிக் கண்ணுடித் தூள்களை அலங்கரித்தது. அந்த—ஒவ்வொரு கண்ணுடித் துண்டுகளிலும் ஒவ்வொரு எழிலுருவம் என்னைப் பரிதாபமாகப் பார்த்தது. ஆம் அது அவளேதான். மல்லிகாவேதான்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்து சலித்து ஐம்பத்தைந்து வயதையடையப் போகும் எனக்கு அந்தப் பால்ய அனுபவம் நேற்று நடந்ததுபோற் தோன்றுகின்றது. அப்பொழுது நான் கல்லூரிப்பிள்ளை. பீ. ஏ. பரீட்சை எழுதி முடித்துவிட்ட நான் அன்று கல்லூரி ஆண்டு விழாவுக்காகச் சென்றிருந்தேன், அத்துடன் ஆசிரியர் குழு நடாத்திய "வள்ளுவனர் ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசையும் பெற்றேன்.

அன்றைய தினமே எனது கல்லூரி வாழ்வுக்கு ஒரு கும்பிடுபோட்டு நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். வெளி வாசல் வழியனுப்பி வைத்தது.

நாலடி வைத்திருப்பேன். பின்னலிருந்து ஒரு இனிய குரல் "மிஸ்டர் சந்திரன்" — திரும்பி நோக்கினேன். மாணவி மல்லிகா நின்று கொண்டிருந்தாள். அன்றுதான் அவளை நன்று கவனித்தேன். பிரும்மனல் நிதானமாகச் செதுக்கிவிடப்பட்ட உயிர்ச்சித்திரம். சுருங்கச் சொன்னல் அவளை ஒருமுறை பார்த்தாற்போதும் ஐம்புலன்களுள்ளும் நிறைந்துவிடும் திவ்விய அழகு.

"மிஸ்டர் சந்திரன் நான் உங்கள் கவனத்தில் படாதவளாயினும் நீங்கள் அந்த ஆராய்ச்சிக்கட்டுரையின்மூலம் எனது ஆழமான உள்ளத்தைத் தொட்டுவிட்டீர்கள், நானும் உங்களுக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டும்போலிருந்தது. இந்தாருங்கள்"—நீட்டிய அவளது பொற்கரங்களை நோக்கினேன். ஒரு அழகிய உயர்ந்தரகக் 'கூலிங் கிளாஸ்'. நளின கைகளில் தவழ்ந்துகொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தது. பதில் பேசாமல் அதை வாங்கிக்கொண்டேன். அந்த அழகைக் கிட்ட இருந்து பார்த்து ரசிக்க எனக்கு ஒரே அச்சம். ஏதோ சொல்ல வாயெடுத்தவளையும் சட்டை செய்யாது "பஸ்ஸுக்கு நேரமாகிவிட்டது வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

வீட்டையடைந்தவன் — "ஆசையுடன் கொடுத்தவளுக்கு 'நன்றி' என்று ஒரு வார்த்தையாவது பேசினேனா? — என்னையே நொந்து கொண்டேன்.

"வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பத்திலும் எதிர்பாராத சம்பவங்கள் மனிதனின் சூழ்நிலையை மாற்றமடையச் செய்கின்றன" — நான் மல்லிகாவின் திடீர் சந்திப்பிலிருந்தும் பிரிவிலிருந்தும் கற்றுத்தெளிந்த ஒரே பாடம் இது. உலக சுழற்சி என் அறிவுக்குப்படவில்லை. வாழ்வின் ஆனந்தமயமான அத்தியாயத்தை முடித்துவிட்ட நான் அடுத்தபடியாக ஒரு பத்திரிகை ஆரம்பித்தேன். நல்ல வரவேற்பு. நல்ல கதைகளின் எழில் வர்ணனைகளிலெல்லாம் அவளை வைத்துப் பூசித்துக்கொண்டேன்.

அடுத்து எனது திருமணம். அமைதியான வாழ்வு. மழலைச் செல்வங்கள். இடையே தொழில் ஊக்கம். எனது உயிர்வாழ்வின் ஓட்டம் இப்படியாகச் சுழன்று நரைத்த மக்கிப்போன அத்தியாயத்தை அடைந்துவிட்டேன். ஆனால்...' அந்த நப்பாசை! மல்லிகாவின் கனா அனுபவம். 'வாழ்வில் இன்னொருமுறை அவளைக் காணமுடியுமா? இது எனக்குப் பைத்தியக்காரத்தனமாகப் படவில்லை. விவேகத்தனமாகவும் படவில்லை.

என்றோ ஒருநாள் எனது மூத்த மகன் அந்தக் கூலிங்கிளாஸை உடைத்துவிட்டான். நல்லவேளையாக ஒருபக்கக் கண்ணாடி தப்பித்தது. 'பிரேமை' நீக்கிவிட்டு அன்றுமுதல் அந்த ஒற்றைக் கண்ணாடியில் இந்தப் பொய்யுலகின் அழகைப் பார்க்க வாரம்பித்தேன், ஏதோ உளுத்துப் போன இன்பத்தை மானசீகமாகப் பார்த்துப் பார்த்து என்னை நானே ஏமாற்றிக்கொண்டிருந்தேன். இந்த ஏமாற்றமான ஆவலிலும் ஒரு இன்பம். இந்தத் தணியாத ஆசையைத் தடுக்க வழி! அவளை இன்னுமொரு முறை பார்த்துவிட்டால் போதும். மனிதனால் செய்யமுடியாத காரியம்! நினைப்போடு தங்கிவிடும் இந்த ஆசை நிறைவுறுமா என்பதுதான் என்னுள் எழுந்துகொண்டிருக்கும் வினா.

∴ ∴ ∴

என்னுடைய பத்திரிகைக் காரியாலயத்தில் நுழைந்தேன்! அங்கு எனக்காக ஒரு தந்தி காத்துக்கிடந்தது. பிரித்துப் பார்த்தேன்.

"ஜீவன் இறந்துவிட்டார்" என்றிருந்தது. தந்தி அனுப்பியிருந்தவர் ஜெயராம் என்றிருந்தது. 'ஜீவன்' என்றதும் எனக்குப் பக்கென்றது. பிரபல கதாசிரியர்; சிறுகதை எழுத்தாளர். எனது பத்திரிகையின் கதைப் பகுதிக்கு ஒரு ஜீவன். ஆனால் ஒரே யொரு விசேஷம். இந்த ஜீவன் தன் இயற்பெயரையும், தான் இன்னாரென்பதையும் எனக்குத் தெரிவிக்கவேயில்லை. இந்த ஜீவன் யாராயிருக்க வேண்டும். என்றோ எழுந்துவிட்ட இக்கேள்விக்கு இன்று ஆய்வு நடத்.

தினேன். இந்த மனிதரின் புகைப் படத்தை அனுப்புமாறு அழாக்குறையாய் எழுதியிருக்கின்றேன். தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் சுபாவம் அறவே கிடையாதுபோலும்

எங்கோ ஒருமூலையில் ஒரு ஜீவன் தன்னைத்தானே தாழ்த்திக்கொண்ட நினைப்புடன் உலகைவிட்டு நீங்கிவிட்டது. காரியாலய அறையை இழுத்துப் பூட்டிவிட்டு ரயிலடிக்கு நடையைக் கட்டினேன்.

றயிலுக்குள் ஏறினேன். ஜீவனைக் காணப் போகின்றோம் என்ற ஆவல். எந்நிலையில் காணப்போகின்றோம் என்பதை நினைக்கும்போதுதான் உடம்பு சிலிர்க்கின்றது. ஜீவன் யார்? எப்படியிருப்பார்? கதைகளில் நிகழ்ச்சிக் கோர்வைகளைத் தொடுக்கும்போது அவற்றினிடையே ஊதித் தள்ளும் மனித தத்துவங்கள், வாழ்வின் சுய மலர்ச்சிகள், ஆசை நிராசைகளின் இலக்கணங்கள்! இவ்வளவு கற்பனைகளையும் சுரந்துதள்ளும் அவரது உருவம் எடுப்பாகவும் அமைதி கலந்த சௌந்தர்யத்துடனும் இருக்க வேண்டும். அனுவசியக் கற்பனைகளிலிருந்து மீளுமுன் ரயிலடியும் வந்துவிட்டது.

தந்தியிலிருந்த விலாசப்படி வீட்டு நம்பரைத்தேடிப் புறப்பட்டேன். அது ஒரு அழகான வீடு. பிரேதவீடு என சொல்லாமற் சொல்லிற்று. கோரமான அழுகுரல்கள். வெப்பம் கலந்த பேரிரைச்சல். ஒரே ஓலம். வெளிவாசலில் என்வயதினுள்ள ஒருவர் என்னைப் பரிதாபமாக வரவேற்றார். 'ஜெயராமர்' இவராகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு உள்ளே போனேன்.

அதுதான் பிரேத அறை! அந்த அறையின் ஒரு பக்கத்தில் ... ...! விளக்கொளிக்கு ஈடுகொடுக்கும் [illegible]க மாக கிடத்தப்பட்டிருக்கும் உருவம்...! ஒருபெண். வாழ்ந்து சலித்த ஒருவித அழகு! 'ஜீவன்' என்பவள் பெண்ணா! ஜீவன்... அந்த ஜீவன் பிரிந்துவிட்டது. இந்தப் பெண் யார்? யாராயிருக்கவேண்டும்? கூர்ந்து கவனிக்க வேண்டும் போலிருந்தது. அந்த அந்திய அழகு தன்னையே அறிமுகப்படுத்தும் அழகு! எங்கேயோ அறிவின் மூலையிலிருக்கும் ஒரு ஜீவனைப் பிய்த்தெடுத்தது.


இவள்...! இவள்? அருகிலிருந்த ஒரு கிழவி எனது உள் வினவுக்கு விளக்கப் கொடுக்கும் பாவனையில் "மல்லிகா" என்று கூவி அழுதாள். "மல்லிகா" — என்னுள் ஜீவன் ஆட்டங்கொண்டது.

எனது ஆசையின் நிறைவை முடித்துவிட்டு ரயிலேறினேன். அடக்கி வைத்துக்கொண்டிருந்த வேதனை பீரிட்டது. கண்ணீர் வெள்ளம் திரண்டு விழுந்துகொண்டிருந்தது. அந்த வெள்ளத்தினிடையே அழகுக் கண்ணாடி. எனது நெஞ்சத்தில் பதித்து விடப்பட்ட கண்ணாடி. அதில் மல்லிகாவின் கண்ணாடி முகம்.......! கண்ணீர் வற்றியும் விட்டது.

இந்தியாவிலுள்ள விற்பனையாளர்களும் சந்தா நேயர்களும் தயவுசெய்து உடனே கீழ்க்கண்டவரிடம் தொடர்பு கொள்க :-

**சோ. பரமசாமி,**
**விக்டோரியா ஹாஸ்டல்,**
திருவல்லிக்கேணி — **சென்னை.**

தொடர்கதை




## 14. மணப்பெண் பூங்கொடி

நான் கல்லுப்பிள்ளையார் போல அந்தக் கம்பளத்தில் உட்கார்ந்திருந்தேன். எனது உடலெல்லாம் வெயர்த்து ஆருகப் பெருகிக்கொண்டிருந்தது. எனது இதயத்தில் எழுந்த ஒவ்வொரு அசைவும், எனது அங்கங்களில் பிறந்த ஒவ்வொரு துடிப்பும், எனது உள்ளாத்மாவைப் பொசுக்கிக்கொண்டு பாய்ந்த ஒவ்வொரு மூச்சும், "நீ சரசுவுக்குத் துரோகம் செய்துவிடப்போகிருயா? அவளை மறந்துவிடப் போகிருயா? இன்னெரு பெண்ணை மணந்துகொள்ளப் போகிருயா? உன்னையே சதமென்று நம்பிய ஒரு அபலைப் பெண்ணைக் கைவிட்டுவிடப் போகிருயா?" என்று எனது காதுச் சவ்வுகள் வெடிக்கும் அளவுக்கு ஓங்காரக் கூச்சலிட்டு அலறின. அந்த நேரத்தில் இருந்திருந்து எனது நெஞ்சில் தோன்றி விசுவரூபமெடுத்து உடலெல்லாம் பாய்ந்த ஒரு வெறி உணர்ச்சி எல்லோரது குரல்வளையையும் நெரித்துக் கொன்றுவிட்டு ஓடிப்போய்விட வேண்டும் என்ற விபரீத எண்ணத்தைப் பிரசவித்துக்கொண்டிருந்தது. ஆனல் பொறுத்தேன். இன்னும் ஒன்றும் தலைமுழுகிவிடவில்லை என்று பொறுத்தேன். பொறுத்தார் புவியாழ்வார் என்ற பொன்மொழியை எண்ணிப் பொறுத்துக்கொண்டேன்.

எனது வலதுகைப் பக்கமாக சிறிது தூரத்தில் இருந்த சித்தப்பா யாவும் சுபமங்களமாக முடிந்துவிட்டது என்று எண்ணினரோ என்னவோ, ஒரு பலகாரத்தட்டைச் காலி செய்துகொண்டிருந்தார். நான் அவர்பக்கமாகச் சிறிது நகர்ந்து "கொஞ்சம் வெளியே வாருங்கள்" என்று மெதுவாகச் சொல்லிவிட்டு எழுந்து வெளியே வந்தேன்.

"அப்பா! இன்றைக்குப் பெண் பார்க்கத்தான் வேண்டுமா? இதை

ஒரு நாளைக்காவது தள்ளிப்போட முடியாதா ?" என்று நான் சித்தப்பாவைக் கெஞ்சினேன்.

"சிவஞானம்! பலர்கூடி வைத்த நாட்காரியத்தைத் தடைபண்ணக் கூடாது. கல்யாணத்தை வேணுமென்ருல் தள்ளி வைத்துக்கொள்ளலாம்" என்று நிர்விசாரமாய்ச் சொன்னுர் சித்தப்பா.

"நான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். செய்யமுடியாது. அதனுற் தான் இவ்வளவுதூரம் சொல்லுகிறேன். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

"அட பெண்ணைப் பார்க்குமுன்னரே கல்யாணம் செய்யமாட்டேன் என்கிருயே. முதலில் பெண்ணைப் பார். பெண்ணுக்குப் பெயரோ பூங்கொடி" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு திரும்பினுர் சித்தப்பா.

"அப்பா, நாங்கள் பூங்கொடியைப் பார்த்துவிட்டுச் செல்வது சுலபம். பின்னர் பெண்ணைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடுவது இன்னும் சுலபம். ஆனுல் நாங்கள் வேண்டாம் என்ருல் பூங்கொடி என்றைக்குமே கன்னியாக இருந்துவிடப் போவதில்லை. நாளைக்கு இன்ெனுரு கல்யாணம் பேசும்பொழுது இத்தனைபேர் பார்த்து வேண்டாமென்றது என்ற வசைச்சொல் இருக்கவே செய்யும். ஆறுதலாக எண்ணிப் பாருங்கள். நான்தான் அவளைக் கல்யாணம் செய்யப்போவதில்லை என்ருல் இனிமேல் யாருமே செய்யமாட்டார்கள் என்று அர்த்தமல்ல. ஆனபடியால் இந்தளவில் விஷயத்தை முடித்துப் பெண்ணைப் பார்க்காமலே புறப்படுவோம்." என்று மன்ருடினேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் சின்னம்மா சொன்னது இவ்வளவுதான். இனிமேலும் சின்னம்மாவைக் கேட்டுத்தான் எதுவும்" என்று சொல்லிவிட்டு நடந்தார் அந்த ஆண்பிள்ளை.

இந்தளவில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நான் தெருவழியே இறங்கிப் போயிருக்கலாம். அப்படிப் போயிருந்தால் எனது தலையை யாரும் சீவி எறிய முடியாது. ஆனுல் என்னைப் பணயமாக வைத்துப் பகடையாடிய எனதருமைச் சின்னம்மாவுக்கும் என்மேல் என்றும் அன்பு மறவாத சித்தப்பாவுக்கும் என்னுல் ஒரு அவமானம்; ஒரு இகழ்ச்சி வரக்கூடாதேயென்று இந்த நேரத்திலும் எண்ணினேன். அதனுல் வளர்ந்து வாழ்ந்து அனுபவப்பட்ட பெரியவர்களுக்கு வராத புத்தியும் மான அவமான உணர்ச்சியும் எனக்கு மட்டும் வந்து என்ன உபயோகம் என்ற நினைவில் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு சித்தப்பாவைப் பின் தொடர்ந்தேன்.

"பூங்கொடியை அழைத்து வாருங்கள்" என்ற பெண்ணைப் பெற்ற பிதாவின் கட்டளையைத் தொடர்ந்து, பெண்—பூங்கொடி தரிசனமானுள். நிமிர்ந்து பார்த்தேன். பெண்தான் !

பட்டுச்சேலை உடுத்திருந்தாள். நிறையத் தங்க நகைகள் போட்டிருந்தாள். கூந்தலைவாரி இரட்டைப் பின்னல் போட்டிருந்தாள். முக்காடு போட்டிருந்ததால் முகம் தெரியவில்லை; தெரிந்துதான் என்ன ஆகப் போகிறது ?

ஒருத்தி பூங்கொடியின் கையைப் பற்றிக்கொண்டு முன்வர, அவள் தட்டித் தடவித் தடுமாறிக்கொண்டு பின் நடந்தாள்.

ஏன் ?

"பெண்ணுக்கு என்ன? ஒரு மாதிரியாக நடக்கிறதே!" என்று பக்கத்தில் இருந்த சித்தப்பாவைக் கேட்டேன்.

"உனக்கு விஷயத்தை இன்னும் சொல்லவில்லையா? பூங்கொடிக்குக் கண்கள் இரண்டும் தெரியாது."

"தெரியாதா? அப்படியென்றால்"

"பிறவிக் குருடு!"

மனிதர் எல்லோரும் தாங்கள் தாங்கள் விரும்பியபடி பிறப்பதென்றால் — அப்படிப் பிறக்க முடிவதென்றால் மனித சமுதாயத்தில் கூன், குருடு, நொண்டி, செவிடு, ஊமை என்ற குறைஜென்மங்கள் யாருமே இருக்கமாட்டார்கள். அழகு அவலட்சணம் என்ற ஏற்றத்தாழ்வு கூட ஏற்பட்டிருக்காது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றால்—இயற்கை மாதாவின் ஓரவஞ்சகத்தனத்தால் — விரிஞ்சனனின் விஷப்பரீட்சையின் விளைவால் சில மனிதர் குறைப்பிறவி எடுக்கிறார்கள். ஆதலால் வலியவன் மெலியவனை வருத்துவதும், அழகுள்ளவன் அவலட்சணத்தைக் கேவலப்படுத்துவதும், கண்கள் இரண்டையும் பெற்ற நான் பூங்கொடியைப் புறக்கணிப்பதும் விவேகமற்ற செயல்கள்.

ஆனால் —

சரசுவின் சுந்தர விழிகளைக் கண்டு சிந்தை பறிகொடுத்த நான், அவளுடைய பாடும் விழிகளைக் கண்டு பரவசமடைந்த நான், அவளுடைய விழியழகைக்கண்டு—அவை எனது விழிகளை எதிர்கொள்ளும் திராணியற்று ஓடிச் சுழித்துச் சுழல்வதைப் பார்த்து மகிழ்ந்து, அந்த இன்ப நினைவிலேயே எஞ்சிய காலத்தைக் கழிக்கலாம் என்று கனவுகண்டிருந்த நான், கண்களேயில்லாத— கண்களின் பாவையேயில்லாத—பாவையின் பார்வையேயில்லாத பூங்கொடியைக் கல்யாணம் செய்துகொள்வது என்பது முடிகிற காரியமா? ஆண்டவன் எனக்கென்று மட்டும் மரக்கட்டையை வைத்தா நெஞ்சு செய்தார்? நானும் ஆசாபாச உணர்ச்சிகளுக்கு அடிமைப்படக்கூடிய சாதாரண மனிதன்தானே? இந்நிலையில் நான் எனது காதலைத் துறந்துவிட்டு, ஒரு குருட்டுப் பெண்ணுக்கு வாழ்வளிக்கும் மனப்பான்மையில் பூங்கொடியை மணந்துகொள்ள வேண்டும் என்று சித்தப்பாவோ சின்னம்மாவோ அல்லது யாரேனும் கருதினால், அவர்கள் என்னை ஒரு காந்தி என்றோ, ஒரு புத்தர் என்றோ தவறாக எடைபோட்டுவிட்டார்கள் என்று அர்த்தம்; அல்லது அப்படி எண்ணக்கூடிய அத்தனை பேரும் பண்புகெட்ட, பகுத்தறிவை யிழந்த மிருகங்கள் என்று அர்த்தம். இவற்றில் எது சரியோ நான் அறியேன்.

தெய்வமே! ஒரு ஆண் ஒரு பெண்ணைக் காதலிப்பதென்பது நான்தான் இந்தப் பாழ்பட்ட உலகத்துக்கு அறிமுகப்படுத்திய ஒரு புரட்சியான, புதுமையான செயல் அல்ல. அப்படியிருக்க சரசுவும் நானும் ஒருவரையொருவர் உள்ளன்போடு நேசித்தது தவறாக முடியாது. அப்படித்தான் அது பாரதூரமான குற்றமாக இருந்தாலும்கூட, அதற்காக எனக்கு இன்று அளிக்கப்பட்டிருக்கும் தண்டனை அதிகமானது; என்னால் ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு அதிகமானது; என்னால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகமானது. ஆமாம் அதிகமானது.

# 15. சரசு எங்கே?

அன்று—

அந்த அதிகாரி என்னை ஏற இறங்கப் பார்த்ததில் இருந்து அவர் அடுத்துச் சொல்ல இருந்ததை என்னால் ஊகிக்க முடியவில்லை.

நின்றேன்.

"உன்னை மூன்றுமாத காலத்துக்குத் தற்காலிகமாகத்தான் உத்தியோகத்தில் சேர்த்திருந்தோம். அந்த மூன்றுமாத தவணையும் இன்னும் சில தினங்களில் முடிவடைகிறது" என்று சொல்லிவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார்.

இன்று எனது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இன்னல்களுக்கு மத்தியில் இந்த உத்தியோகம் ஒன்றுதான் எஞ்சி நின்றது. அதுகூட இந்தநேரத்தில் இல்லாமல் போவதானால் அது என் வாழ்வில் ஒரு மிகப்பெரிய சோதனையாகும். எந்தச் சம்பவமும் நாம் நினைக்கிறபடி வந்து ஈடேறுவதில்லை. ஆகையால் வருகிறதெல்லாம் வரட்டும். வந்து நடக்கிறதெல்லாம் நடக்கட்டும். நடந்து முடிகிறதெல்லாம் முடியட்டும் என்று எண்ணி மரமாக நின்றேன்.

"இந்தக் கம்பனிக்கு" அந்த அதிகாரி தொடர்ந்தார். வேண்டா வெறுப்பாக வேலை பார்ப்பவர்கள், ஏனோதானோவென்று கடமை செய்கிறவர்கள் தேவையில்லை."

நான் எந்த நிமிடமும் அப்படி ஏனோதானோவென்று நடந்துகொண்டது கிடையாது. எனது வாழ்வில் என்னைச்சுற்றி எத்தனை இடர்கள் எழுந்தபோதும் அலுவலகத்துக்கு வந்துவிட்டால் முடிந்தவரை எல்லாவற்றையும் மறக்கமுயன்று இயன்றவரை வேலையைச் செய்திருக்கிறேன். ஆகையால் மௌனமாக நின்றேன்.

"இங்கு வேலைபார்க்கும் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் இதைத் தங்கள் சொந்தக் கம்பனி என்று எண்ணி சுயநலமில்லாமல், நாணயமாக, உண்மையாக உழைக்கவேண்டும். அப்படியானவர்களைத்தான் இந்தக் கம்பனிக்குத் தேவை"

என்னைப் பொறுத்தவரையில்—எனது மனச்சாட்சியைப் பொறுத்தவரையில் அந்த அதிகாரி குறிப்பிட்ட அத்தனை வழிகளிலும் நின்று உழைத்திருக்கிறேன். ஆகையால் இன்னமும் நின்றேன்.

"ஆனபடியால் இந்த மூன்று மாதகாலத் தவணையும் முடிந்ததும் உங்களைக் குமஸ்தா சேவையில் இருந்து நீக்க உத்தரவாகியுள்ளது." என்று கூறிய அவர் நிமிர்ந்து மீண்டும் என்னைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து கூறினார். "அதன்மேல் உன்னை எமது கிளை ஸ்தாபனம் ஒன்றில் உதவி மனேஜராக்கி திருகோணமலைக்கு மாற்றியுள்ளோம்."

"ரொம்பச் சந்தோஷம். மிகவும் நன்றி சார்" என்று நான் தடுமாறினேன்.

"நாங்கள் எதிர்பார்த்த அத்தனை தகுதிகளும் திறமையும் உன்னிடமிருப்பதைக் கண்டே இந்த உயர்வைத் தந்தோம். ஆரம்பத்தில் மாதம் ஒன்றுக்கு முந்நூறு ரூபா சம்பளம் தரப்படும். உனது உழைப்பைப் பொறுத்து உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் வரலாம்"

"உங்கள் பெரும் உதவிக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். என்னால் முடிந்தவரை திருப்திகரமாக வேலையைக் கவனிப்பேன்" என்று நன்றி உணர்வோடு கூறினேன்.

"இன்னும் பத்துத் தினங்களில் திருகோணமலைக்குப் போய் உத்தி யோகத்தைப் பொறுப்பேற்க வேண் டும். அதற்கான ஆயத்தங்களை நேரத்தோடு செய்துகொள்வது நல் லது" என்றுகூறி அந்த அதிகாரி நியமனக் கடிதத்தை நீட்டினர்,

எனக்கு இனிமேல்தான் ஒரு நல்லகாலம் பிறக்கப்போகிறதுபோல இருக்கிறது. நான் கேட்காமல் மனுச் செய்யாமல், முயற்சி எடுக்காமல் இருக்க ஒரு உயர்ந்த உத்தியோகம் என்னைத் தேடி வருவதென்றால் அது நல்ல காலமல்லாமல் வேறென்ன ?

இந்தச் செய்தியைச் சரசு அறிந் தால் எவ்வளவு ஆனந்தமடைவாள். நான் குறைந்த சம்பளத்தில் நிரந் தரமற்ற ஒரு உத்தியோகத்தில் இருப் பதை அறிந்திருந்தும்கூட சரசு என்னை நேசித்தாள். அதாவது இந்தக்காலத்துப் பெண்களில் சில ரைப்போல அவள் எனது உழைப் பையோ ஊதியத்தையோ காதலிக்க வில்லை. அவள் என்னைத்தான் காத லித்தாள், என்னைத்தான். அந்தத் தூய உள்ளம் படைத்தவளுக்கு இரங் கித்தான்போலும், இறைவன் இந்த உயர்ச்சியைத் தந்தான்.

அன்றைய வேலைகளைச் சீக்கிர மாக முடித்துவிட்டு, நாலு மணியள வில் அலுவலகத்தைவிட்டுப் புறப் பட்டு போலிஸ் நிலையத்தை நோக்கி நடந்தேன். முன்தினம் என்னைப் போலிஸார் தேடித்திரிந்ததன் கார ணத்தை அறிய அவ்வளவு ஆவலாக இருந்தது.

போலிஸ் அதிகாரி என்னை உட் காரச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று ஒரு பெட்டியுடன் திரும்பி னர். அதுதான் அன்றொருநாள் நான் சரசுவிடம் மாறி எடுத்துக்கொண்ட பெட்டி. அதுதான் சரசுவிடம் கொடுத்துவிட வேண்டும் என நான் அலைச்சலாய் அலைந்த பெட்டி. அது தான் எனது எண்ணத்தில் மண்ணைப் போடும்படியாகத் திருட்டுப் போயி ருந்த பெட்டி.

பாவனையில் இல்லாத அரசின ருக்குச் சொந்தமான ஒரு பழைய கட்டட அறையில் இந்தப் பெட்டி யையும் வேறு சில பொருட்களையும் கண்டெடுத்தார்களாம். ஆனால் திரு டியவனையோ அல்லது அவனைப் பிடிப்பதற்காக ஆதாரம் ஏதுமோ கிடைக்கவில்லையாம்.

"ஆதலால் உங்கள் பொருட்களை நீங்கள் கொண்டுபோகலாம். எப் பொழுதாவது இந்தத் திருடனைப் பிடிப்பதற்காக சாத்தியக் கூறுகள் தோன்றினல் நீங்கள் இங்கு வந்து போகவேண்டிய அவசியம் வரும்" என்று அந்தப் போலிஸ் அதிகாரி கூறினர்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு நான் பெட்டியும் கையுமாக குதூ கலத்துடன் தெருவில் இறங்கினேன்.

இன்றைக்கு வீட்டுக்குப் போன தும் போகாததுமாக சரசுவுக்கு மூன்று செய்திகளைச் சொல்லவேண் டும். முதலாவது திருட்டுப்போன பெட்டி கிடைத்துவிட்டது. இரண் டாவதாக எனக்கு உதவி மனேஜ ராக உயர்ந்த உத்தியோகம் கிடைத் திருக்கிறது. மூன்ருவதாக எனக்கு திருகோணமலைககு மாற்றம் ஏற்பட் டிருக்கிறது.

துள்ளிக் குதித்துக்கொண்டு வீட் டுக்கு ஓடிப்போனல் அங்கு என்னை வரவேற்றது.—

ஒரு பெரிய பூட்டு!

கதவெல்லாம் பூட்டப்பட்டு இருந் தன. அங்கு யாரையுமே காணேம். எல்லோரும் எங்கு போயிருப்பார்கள் என்று நான் ஸ்தம்பித்து நிற்கை யில், பக்கத்து வீட்டுக்காரர் வந்து ஒரு திறப்பையும் ஒரு கடிதத்தையும் என்னிடம் நீட்டினர்.

—தொடரும்

சுத்தமாக

சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

— — தயாரிப்பாளர் — —

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ருஜா ஸ்ரோர்ஸ்

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி ESVES

அன்பு சொட்ட, அழகு தமிழ்த்தேன் சொட்ட, அற்புதக் கவிதை நயம் சொட்ட, மட்டுநகர்க் "கவிநேசன்" பாடுவது "இன்பமடா,"

# — இன்பமடா —

## கவிநேசன்

தேடும் பொருளெனக் கின்பமிலை — இதழ்
தேனை யளிப்பவ ளின்பமிலை,
கூடும் புகழ்எனக் கின்பமில்லை — மலர்க்
கொத்து நுகர்வதி லின்பமிலை,
ஏடும் கவிதையு மின்பமடா — தமிழ்
ஏச்சி லிருப்பது மின்பமடா
நாடும் பழமையு மின்பமடா — எனை
நல்கிய அன்னைசொல் லின்பமடா.

பொன்னகை பூணுத லின்பமிலைக் — குமிழ்ப்
புன்னகை செய்பவ ளின்பமிலை,
மின்னலிடை யெனக் கின்பமிலை — சுவை
மேனி யளிப்பவ ளின்பமிலை,
செங்நெல் விளைப்பதி லின்பமடா — பயிர்
செய்து பிழைப்பதி லின்பமடா,
நன்னூல் சுவைப்பதி லின்பமடா — கலை
நற்பணி செய்வதே யின்பமடா.

கால்கை பிடிப்பதி லின்பமிலை — உயர்
'காரி'லுல வுதல் இன்பமிலை,
பால்சுவை நற்கனி இன்பமிலை — மலர்ப்
பஞ்சணை தூங்குத லின்பமிலை
நூல்படித் துள்ளுத லின்பமடா — வெளி
நுண்கலை கற்பதி லின்பமடா
வேல்பிடித் தேயுயிர் நீத்த — பழந்தமிழ்
வீரரைப் போற்றுத லின்பமடா.

சொல்லில் இனிப்பவர் இன்பமிலை — தினம்
தொல்லை கொடுப்பவர் இன்பமிலை,
கல்லித யத்தவர் இன்பமிலை — யவர்
கட்சியிற் சேர்வதும் இன்பமிலை,
சொல்லை மதிப்பவர் இன்பமடா! — அவர்
தூயபணி செய்தல் இன்பமடா!,
வெல்லும் அணிவேறே இல்லையடா — மனம்
வீணில் அலைவது தொல்லையடா.

# அ. இ. பாதசாரிகள் சங்கம்

ஷெ சங்கத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் இன்று, அதாவது 6-10-60 யாழ்ப்பாணம் முட்டாஸ்கடைச் சந்தியில் கூடியிருக்கின்றது. பகீரதப் பிரயத்தனத்தின் பலனுக இச்சங்கம சென்ற ஆண்டு கூட்டப்பட்டது. அகில இலங்கைக்கே ஒரு சங்கம் கூட்டுவதில் ஏற்படும் கஷ்டங்களை நீங்கள் ஓரளவு யூகிக்கலாம். தெய்வானுகூலமாக செயலாளர் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்துள்ளார்கள். அன்னூர் சேவைகளைப் பற்றி இரண்டு வார்த்தைகள்!

**பத்மா**

நமது திறமை மிக்க தொண்டர்கள் சென்ற ஆண்டு நூறு சயிக்கில்களுக்குக் குறையாமல் "வால்வ் டியூப்" களைக் கள்ளமாகக் கழற்றியுள்ளார்கள் ஆகவே சராசரி மூன்று நாட்களுக்கு ஒரு தாக்குதல் நடந்துள்ளது எனக் கூறலாம். இந்த டியூப்கள் நாளைக்கு ஏலத்தில்விற்கப்படும்.

மேலும் மழைக்காலங்களில் கார்கள் பண்ணும் குரங்குச் சேட்டைகளையும் ஓர் அளவு தண்டித்துள்ளார்கள். கார் நம்பர்களைக் குறித்து வைத்திருந்து வசதி வாய்க்கிற வேளைகளில் கைவசம் வைத்திருக்கும் வாட்டர் பிஸ்டல்களால் காவித் தண்ணீர் அடித்துள்ளார்கள்.

நம் சங்கம் சேவைசெய்ய முன் வந்து, சேவைகள் செய்தும்கூட பாதசாரிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. வருந்தக்கூடிய செய்தியாகும்! காரணம் என்ன? அநேகமாக மக்களின் கால்கள் தான் மக்கர் பண்ணுகின்றன எனக் கூறலாம். பெண்களுக்குத் தான். குதிக்கால்ச் செருப்புப் போட்டுக்கொண்டு விழுந்தெழும்பி நடப்பது கஷ்டமென்ருல் ஆண்களுக்கு என்ன கஷ்டம்? வாகனங்களில் செல்ல வேண்டும் என்பதே மக்களிடையே பொதுவாகப் பரவியுள்ள "புளூ". இந்தக் காலத்தில் தெருக்களில் அலைந்து திரிகின்ற வண்டிகளைக் கண்டாலே விஷயம் விளங்கும். என்ன சொல்லுகிறீர்கள்? பெண்கள் கார் ஓட்டுவதும் போதாதென்று குடுகுடு என்று ஸ்கூட்டர் சவாரியிலும் தொடங்கிவிட்டார்கள். முற்காலத்தில் வரம்புகளில் கஞ்சித்தண்ணீர் தூக்கிக்கொண்டு கால் கடுக்காமல் நடந்தவர்களுக்குக்கூட சோம்பேறித்தனம்!

இதைவிட விசேஷம் என்னவென்ருல் ஆறு ஏழு வயது நிரம்பாத பொடிப் பயல்களும் சயிக்கில் எட்டாத காரணத்தால் தொங்கிக் கொண்டு உழக்குவதைப் பார்த்தால் 'கொல்' என்று சிரிப்பீர்கள். இப்படிக் காலம்

போகிற போக்கில் பழமையில் முழுகி இப்பொழுதும் 'நடை' பயிலும் பாதசாரிகளுக்குக் கூடிய பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியமல்லவா?

இதேதடா பாதசாரிகளாம், பாதுகாவலாம்! ஏது? உலோகக் கவசங்களுக்குள் பதுங்கிக் கொண்டு திரியவேண்டும் எனச் சொல்லப் போகிருரா என நீங்கள் யோசிக்கலாம்! மேற்கூறிய திலும் பாரதுரமான கதை யுண்டு. யாழ்தேவி என்றும், யாழரதம் என்றும் பெயர்களுடன் அள்ளிப் பிடித்துக்கொண்டு போகும் டாக்ஸிகளையும் லொறிகளையும் காணவே வயிற்றைக் கலக்கும். எங்களுக்கு மட்டும் பறக்கும் சக்தியிருந்தால்! மிகவும் சுலபம். இவ் வண்டிகள் நெருங்கிக் கொண்டு வரும் பொழுது கோழிகளைப் போன்று அந்தரத்தில் பறந்து விலத்திக் கொள்ளலாம். இந்தக் காலத்தில் அதிகமாக ஓடித்திரியும் 'வான் களில்' படுபாவிப் பயல்கள் சனங்களைத் திணித்து, கடைசியில் சிப்பந்தி கதவைத் திறந்து கொண்டு நிற்பதைப் பார்த்தால் அந்த வானுக்கு றேடியோ பொருத்தப் பெற்றுளதோ? பின்னுக்கு நட்டுக்கொண்டு நிற்பது தான் ஏரியல் (aerial) கம்பியோ எனத் தோன்றும். இப்படிக் கம்புபோல் நிற்பவன் எங்கே தாவிக் கழுத்தில் கையைப் போட்டு விடுவானோ என்று பெண்களுக்கு ஒரு தினுசான பயமும் இருக்கின்றது.

இவ் இடுக்கண்களை விளைவிக்கும் இடையூறுகளை முன்னிட்டு, நாமும் பல இன்னல்களுக்கிடையே இச் சங்கத்தை இன்று கூட்டியுள்ளோம். சங்கத்தால் பாதசாரிகளுக்கு இன்னும் கூடிய பலன்களை ஏற்படுத்தலாம் என்ற நம்பிகையில் சில தீர்மானங்களைக் கொண்டுவந்துள்ளோம். இது அவசியம் என்று செயலாளர் யாவரும் ஒரேமுகமாகக் கருதுவதால் இத் தீர்மானங்களை இன்று சமர்ப்பிக்கின்ரேம்.

(i) தொண்டர் படைகளைப் பெருக்கி பாதசாரிகளுக்கு எங்கெங்கே கஷ்டங்கள் ஏற்படக் கூடுமோ, அங்கங்கே உடன்சென்று உதவிசெய்யும் வகையில் சந்திக்குச் சந்தி ஆபீஸ் திறந்து தொண்டர்களை நிறுத்துதல்.

(ii) எந்த வண்டியாயினும் முரட்டுத் தனமாக, சட்டங்களுக்கு விரோதமாக இடிக்க முன்வருமேல், பக்கத்தில் காணப்படும் பாதசாரிகள் ஒன்றுகூடித் தாக்குதல். மிஞ்சினல் குறுக்கே விழுந்து படுத்து சத்தியாக்கிரகம் செய்து நீதி கோருவது.

(iii) நம் பகுதியில் முக்கியமாக சயிக்கிள் புழக்கம் அதிகமானதால், பாதசாரிகள் கையில் பிரத்தியேகமா

கத் தயாரிக்கப்பட்ட ஊசிகள் சகிதம் புறப்படுதல். கிழவர்கள் கைத்தடி நுனியில் இவற்றைப் பொருத்தலாம். இந்த ஊசிகளால் டயர்களைக் குத்தி அவர்களுக்குப் பகிரங்கமாகப் பாடங் கற்பித்தல்.

(iv) தெருக்களில் கூட்டமாக நின்று, கூர்ந்து பெண்களை நேர்க்கும் 'றவுடிகள்' என்ற குப்பைகளை அப்புறப்படுத்தி, பெண் பாதசாரிகள் போக்குவரத்துக்கு வழிகளைத் துப்புரவாக்குதல். இம் முயற்சியினுல் முக்கியமாக இளநங்கையர் கூச்சமின்றி நடமாடுவர். இன்னுமொரு பலனும் ஏற்படும. சிலர் இவர்களைத் தொண்டர்களென நினைப்பதுமுண்டு. இவ்வகையால் தொண்டர்களில் கலப்பேற்படாது. கலக்கம் தோன்ருது!

(v) தாக்குதல் சமயங்களில் தொண்டர்பலம் போதாவிட்டால், உடனே சமீபத்தில் இருக்கும் தொண்டர்களை விசேஷ ஊதிகள் மூலம் அழைத்தல்.

(vi) மேற்படி சங்கத்தில் பிரவேசக் கட்டணமின்றி அங்கத்தினராகச் சேரலாம் என்பதை விளம்பரப்படுத்தி, சங்கத்தைப் பலப்படுத்தி, வெற்றிகரமாகச் சேவை செய்வதுடன் நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளுதல்.

மேல் கூறப்பட்ட தீர்மானங்களை நீங்களும் முழுமனதாக ஏற்றுக்கொள்வீர்கள் என்பது உங்கள் அமைதியாலும், அப்பட்டமாகத் தெரியும். உங்கள் முகபாவங்களினுலும் அறிந்துகொண்டோம் இவற்றை நல்ல வகையில் செயற்படுத்த முதலில் நீங்களும் அடுத்தபடியாக அப்பனும் அருள் புரிவாராக!

வாழ்க பாதசாரிகள்! வாழ்க அவர்கள் சங்கம்!!

எப்பொழுதும் கலப்பற்ற
சுத்தமான

**குளுக்கோரஸ**

என்று கேளுங்கள்

60% குளுக்கோஸ் கொண்ட சிறந்த ஜுஜுப்ஸ். குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய பாதுகாப்பான இனிப்பு.

USWATTE
CONFECTIONERY WORKS.
Moratuwa.
Phone: 363

# உங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தீர்களா?

வாழ்க்கை எப்பொழுதுமே இன்பகரமாயிராது. இப்போதைய குறைந்த வருவாயில் நீங்கள் செட்டாகச் செலவழித்து, மகிழ்ச்சியோடு உங்கள் காலத்தைக் கடத்தினாலும், உங்கள் உயிருக்குயிரானவர்களிடமிருந்து, விதி, திடீரெனச் சதிசெய்து, உங்களைப் பிரித்து விடலாம். அப்பொழுது உங்களை நம்பியிருப்பவர்களை யார் காப்பாற்றுவார்கள்? அவசியமான செலவுகளுக்கு அவர்கள் யாரிடமிருந்து பணம் பெறுவது?.

## எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்.

அவரவர் வருமானத்துக்கு ஏற்ற வகையில் சேமித்துப், பிற்கால நெருக்கடியைத் தவிர்ப்பதற்கேற்ற வழிகாட்டி, உதவத் தயாராய் இருக்கிறோம்.

**நடைமுறையில் உள்ள திட்டங்கள்:-**

* ஆயுள், கல்வி வேதனம், விவாகம் ஆதாரநிதி,
* மோட்டார்,
* தொழிலாளி நஷ்டஈடு,
* நெருப்பு முதலிய இன்சூரன்ஸ்,
* மாதத்தவணைச் சேமிப்புநிதிகள்,
* அழைப்புப்பணங்கள் அறவிடப்படாத விவாக, அந்தியகால சேமலாபநிதிகள்
* காலவரையறுக்கப்பட்ட வைப்புநிதிகள் முதலியன.

## சேர்ந்தோர்க்குச் சேர்ந்துள்ள திட்டத்துக்குத் தக்கதாக விசேட கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

# இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்.

280 இரண்டாம்மாடி, இராசா கட்டடம்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :-526. தந்தி:- "இனிக்கோ"

★ உயிரோவியமான
படங்களுக்கு



செல்லம்ஸ்

போன்:436. யாழ்ப்பாணம்.

## கலைச்செல்வி

# இளைஞர் மன்றம்

கலைச் செல்வங்களே!

வணக்கம். மூன்று உறுப்பினர்களுடைய விஷயங்கள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. 'கண்ணாடி'யை எழுதியவரும் இம்மன்ற உறுப்பினர்தான். சுவையான, சிறிய விஷயங்களை எப்போதும் வரவேற்பேன். மற்றைய உறுப்பினர்களும் எழுதலாமே!

"இளவரசு"

## உறுப்பினர் பட்டியல்

136. க. ஜெயராம், இந்து ஆங்கில பாடசாலை, தொண்டைமனாறு.
127. கு. ஹரிஹரசர்மா, விவேகானந்த வித்தியாலயம், கொழும்பு.
138. எஸ். சுப்பையா, அரசினர் த. க. பாடசாலை, வெளிமடை.
139. செ. நடராசா, கிரியெல்லை த. க. பாடசாலை, உடகரவிட்ட.
140. க. வசந்தமல்லிகா, சென் கபிரியேல் கல்லூரி, டிக்கோயா.
141. ம. சிவகுருநாதன், வித்தியானந்த கல்லூரி, முள்ளியவளை.
142. தி. செந்தில்வேள், சென் தோமஸ் கல்லூரி, முள்ளியவளை.
143. சி. மு. சின்னத்தம்பி, செட்டிக்கேணி வீதி, மாதகல்.
144. க. சண்முகராசா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
145. மு. த. செய்குவிஜிலி சென் அன்ட்ரூஸ் கல்லூரி, புத்தளம்.
146. செ. தி, யோகநாதன், உடையார் வளவு வீமன்காமம், தெல்லிப்பளை.
147. பொ. நாகராசா, பிள்ளையார் கோவிலடி, மாதகல்.
148. ந. ஸ்ரீஸ்கந்தராசா, யாழ்நகர்க் கலாசாலை, காரைநகர்.
149. மு. நடராசா ஸ்டான்லி மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
150. சு. இராமச்சந்திரன், மெய்கண்டான் பாடசாலை, பண்ணாகம்.
151. த. கதிரவேற்பிள்ளை, ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை.
152. க. ஏ. சுக்கூர், ஆ. ப. கலாசாலை, அட்டாளைச்சேனை.
153. ஆ. திலகவதி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
154. வே. சண்முகநாதன், பாத்திமாக் கல்லூரி, கல்முனை,
155. தமிழ்நெஞ்சன், ஆசிரியர், இளைஞர் உலகம், நகரவைக் கட்டிடம், கொழும்பு—13,

—தொடரும்.

## கலைச்செல்வி இளைஞர் மன்றம்

முழுப்பெயர் :...........................................................

முகவரி :...........................................................

பாடசாலை :...........................................................

வயது.................. பிறந்த திகதி....................

திகதி.................. .................................

கையொப்பம்

பெரியார் வாழ்வில் சிறுசம்பவம் :

# — காந்தி —

காந்தி அப்பொழுது உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒருமுறை கல்விப் பரிசோதகர் வந்தார். ஒவ்வொரு வகுப்பையும் பரிசோதித்தார். காந்தியினுடைய வகுப்பிற்கு வந்து ஐந்து வார்த்தைகளைத் தாம் சொல்ல, மாணவர்களை எழுதும்படி கேட்டார். அதில் ஒன்று 'கெட்டில்' (Kettle). காந்தி இச்சொல்லைப் பிழையாக எழுதுவதை அவதானித்தார் காந்தியின் ஆசிரியர். காந்தியை மற்ற மாணவனைப் பார்த்து அச்சொல்லை எழுதுமாறு தனது காலால் காந்தியினுடைய காலில் தட்டினர். ஆனல் அவர்மட்டும் பார்த்து எழுதவில்லை. இதனல் என்ன! காந்திக்கு நாலு சொற்கள் சரி. மற்றவர்களுக்குப் பார்த்து எழுதினபடியால் ஐந்தும் சரி! ஆகவே காந்தியைப்போல நாங்களும் உண்மையைக் கடைப்பிடிப்போம். ஒரு சமயம் நாங்களும் காந்தியைப்போல வரலாம் அல்லவா ?

— அ. ஆனந்தகுமாரசாமி, இல. 35


# கல்முனையில் கலைச்செல்வி

**மணமகள் ஸ்டோர்ஸ்**
மெயின் வீதி,
கல்முனை.

**பான்ஸி ஹவுஸ்**
பொலிஸ் ரோடு,
கல்முனை.

# — புதுவாழ்வு —

"அம்மா வருடப்பிறப்பு வருகிறது. புதுத்துணி வேண்டும்" என அடம் பிடித்தான் மோகன். "ஓகோ ராசாவுக்கு புதுத் துணியல்லோ உடனே வாங்க வேணும். கஞ்சிக்கே தாளம் போட வேண்டியிருக்கிறது. துணியாம் துணி. பிறக்கும்போதே அப்பனை விழுங்கிய துடைகாலி" என்று கூறிக்கொண்டே மகன் முதுகில் மத்தளம் அடிப்பதுபோல் நாலு அறை விட்டாள் லட்சுமி. அவன் அழுதுகொண்டு ஒரு மூலையில் படுத்துவிட்டான். லட்சுமி தன் பழைய நிலையைப்பற்றிச் சிந்தித்தாள். கண்ணீர் மல்கியது அவளது கண்களிலிருந்து.

ஃ ஃ ஃ

அப்போது 'மாணிக்கம் ஜவுளிக்கடை' அவ்வட்டாரத்திலேயே பிரபல்யமாயிருந்தது. அதன் உரிமையாளர் மாணிக்கத்தின் மனைவிதான் லட்சுமி. லட்சுமியின் தம்பி அப்போது ஒருகுழந்தை அவன் மழலைச்சொல்கேட்டு மகிழ்ந்து பிள்ளையில்லாக் குறையை நீககிக்கொண்டனர் மாணிக்கம் தம்பதிகள். அவனும் பதினெட்டாவது வயதில் அவர்கள வீட்டில் ஆயிரம் ரூபாவைத் திருடிக்கொண்டு வீட்டைவிட்டு ஓடிவிட்டான். கொஞ்சக் காலத்தில் ஜவுளிக்கடை நொடித்துவிட்டது. மாணிக்கம் நோயில் வீழ்ந்தார். கடைசிக்காலத்தில் ஒரு பிள்ளையைக் கொடுத்து "இதையும் அனுபவி" எனத் தள்ளிவிட்டார் ஆண்டவன்.

ஃ ஃ ஃ

இப்படியே சிந்தனையில் மூழ்கி தூங்கியேவிட்டாள். விடியற்காலை எழுந்த லட்சுமி மகனின் படுக்கையில் ஒரு கடிதத் கண்டாள். நடுங்கும நெஞ்சத்துடன் அதை விரித்துப் படித்தாள்.

"அன்புள்ள அம்மா!

இந்தக் கடிதம் உன்கையில் கிடைக்குமபோது நான் யாழ்நகரின் எந்த வீதியில் நிற்பேனோ தெரியாது. என்னால் நீ படும் துன்பம் அளவிடற்கரியது. நான் எப்படியாவது உழைத்து கை நிறையப் பணத்துடன் என்றோ ஒருநாள் திரும்பி வருவேன். அந்நாள் எங்கள் வாழ்வில் உதயசூரியன் எழும் பொன்னாளாய் இருக்குமென்பதில் ஐயமில்லை.

உன் அன்பு மகன்
மோகன்"

என எழுதியிருந்தது. பாவம் லட்சுமி அழுதழுது அவள் கண்கள் சிவந்துவிட்டன. 'அழுது என்ன பயன்? போனவன் திருமபி வருவானோ?' என நினைத்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் லட்சுமி.

யாழ்ப்பாணத்தின் ஒரு பிரதான வீதியில் அனுதையாய் அலைந்துகொண்டிருந்தான் மோகன். அவன் பசியால் துடித்துக்கொண்டிருந்தான். பசிக் கொடுமையால் ஒருவரின் 'பர்ஸை'த் திருடிக்கொண்டு ஓடிய மோகன் ஒரு 'காரில்' லேசாக அடிபட்டு பிரக்ஞை இழந்தான்.

கண் விழித்தான் மோகன். தான் ஒரு வைத்தியசாலையில் இருப்பதையும், தன் முன் ஒருவர் இருப்பதையும் கண்டான். அப்போது அவர் "தம்பி 'காரில்' அடிபட்டு இறக்க இருந்தாயே! உன் நல்ல காலத்தினுல் பிழைத்துக்கொண்டாய். சரி உன் பெயரென்ன? ஊரெது?" என்று கேள்விகளால் துளைத்தார். மோகன் அடக்கமாகவும் அமைதியாகவும் நடந்தவற்றை உரைத்தான். "அதுசரி உன் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி தான் என் வாழ்க்கையிலும் நடந்திருக்கிறது. நான் பதினெட்டாவது வயதில் வீட்டைவிட்டு ஓடி வந்தவன். நான் இங்கிருக்கும் 'லட்சுமி நகை மாளிகை'யின் உரிமையாளர். அது சரி உன் அம்மாவின் பெயர் லட்சுமி தானே!" என்ருர் அவர்.

"ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவர் என் அக்கா தம்பி!" ஆனந்த மேலீட்டினுல் அவனை அணைத்துக்கொண்டார் அவர். ஆச்சரியத்தினுல் எதுவுமே பேச மோகனுல் முடியவில்லை.

∴ ∴ ∴

தனது வீட்டு வாயிலில் வந்துநின்ற காரின் சத்தத்தைக் கேட்டு வெளியில் வந்தாள் லட்சுமி. "அம்மா!" என்று கூவிக்கொண்டே பாய்ந்துவந்த மோகனைக் கண்டதும் பிரமித்து நின்றுவிட்டாள். "ஆ என் மகனு? இவர் யார் தம்பி!" என வினவினுள் தொடர்ந்து. "அக்கா! என்னைத் தெரியவில்லை!" என்ருர் அவர். "ஆ! தம்பியா!" என வியப்புற்ருள் லட்சுமி. அவர் "இனி நீங்கள் கவலைப்படவேண்டாம். நானிருக்கிறேன்" என்ருர். பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ? அவர்களின் புதுவாழ்வு ஆரம்பித்துவிட்டது. அம்முறை வருடப் பிறப்பை மோகனைத் தவிர எவர் சிறப்பாக நடத்தியிருக்கமுடியும்.

**ம. இரத்தினசபாபதி.**
**அங். இல. 29.**

மதுரையில் நமது விற்பனையாளர் :
கோ. இராமசாமி,
**தமிழன் பதிப்பகம்,**
3-A, மிக்கேல் மூப்பனுர் தெரு — மதுரை - 9.

# * கவிஞன் *

**மு. ஆதம்லெவ்வை**

(அ. இ: 179)

மெய்யி லெங்கு புண்ணு றினும்
    மெத்தத் துயருறும் கண்ணைப் போல்
வைய மீதிற் குறைகண்டே
    வருந்தும் பண்புடையோன் கவிஞன்!

*

கற்பனை யாகிய கடல் மூழ்கி
    காணருங் கருத்து முத்தெடுத்தே
பொற்புவி யாக்கப் பொய் போக்கப்
    பாபல புனைந்திடுவான் கவிஞன்!


*

கொடியோர் முன்னே வாய் பொத்தி
    கூனிக் குறுகி வாழ்வார் தம்
அடிமை நெஞ்சில் எழுச்சியினை
    ஆக்கப் பாடிடுவான் கவிஞன்!

*

பொன்னைப் பொருளை மதியாது
    பண்பு, அன்பு, நெறி கூறி
அன்னை நாட்டின் துயர் நீங்க
    அருந் தொண் டாற்றிடுவான் கவிஞன்

* * *

# ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!

# சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

## நவீன சேமிப்பிற் சேருங்கள்

| மாதவீதம் கட்டுவது | இலாபத்துடன் கொடுக்கும் தொகை | | |
|---|---|---|---|
| | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
| 10 ரூபா | 330 ரூபா | 720 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

**மேற்குறித்த இலாபத்துடன் ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு அதிட்டஇலாபமும் கொடுக்கப்படும்**

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்

மறு விபரத்திற்கு:-இலங்கா நிதி லிமிற்றெட்

தலைமைக் கந்தோர்:-திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

கிளை:- 284, காங்கேசந்துறை வீதி, வண்ணார்பண்ணை


# அவள் சிரித்தாள்......!

— சு. மகாலிங்கம் —


ஜனம் நிரம்பி வழியக் கூடியதாக பஸ் ஓடிக்கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் உள்ள ஆசனங்களிலும (Seats) மும்மூன்று பேர்களுக்கு குறையாமல் இருந்தார்கள்; இருப்பது போல் பாசாங்கு செய்தார்கள். அவ்வளவு நெருக்கடி!.

ஓடிக்கொண்டிருந்த பஸ் ஒரு கோணத்தில் சடுதியாகத் திரும்பியது. என்னையே என்னால் சமாளித்துக்கொள்ள முடியாத நிலை; சரிந்தேன். சரிந்தாலும் பரவாயில்லை. அவளைப் பார்த்துத்தான் மோதிக்கொள்ள வேண்டுமா? மோதியதால் மண்டையில் அடிபட்ட நோவையும் பொருட்படுத்தாது சிரித்தேன் அவளைப் பார்த்து. அவள் பாடசாலைக்குச் செல்லும மாணவி. சட்டை மடிப்புக் கலைந்து விட்டதே என்று எண்ணியோ, என்னவோ "ஊம்" என்று இருந்தாள். அடுத்து இருந்தவர்களும் என்னை ஏளனப் பார்வை பார்த்தார்கள். ஒருவர், "இந்தப் காலத்துப் பையன்களே இப்படித்தான், பெண்களை வம்புக்கிழுப்பதற்கு சந்தர்ப்பம் எங்கே என்று ஏங்கித்தவிக்கிறார்கள்" என்றார். மற்றொருவர் ஏதோ கூறினர்.

இவற்றையெல்லாம் ஆமோதிப்பது போல் உறுமிக் கொண்டோடிய பஸ் அடுத்த சந்தியில் ஆட்டம் போட்டுக் கொண்டே திருமபியது. அந்தக் கணம் பள்ளி மாணவி துள்ளி மோதினாள் என் மீது. சிரித்தேன், சிரிப்பு வராமல் எப்படி இருக்க முடியும்? அவள்......! சிரிக்காமலா இருப்பாள்? சேர்ந்து சிரித்தாள். முடிவு? அண்ணலும் நோக்கினன். அவளும் நோக்கினள். அடுத்து இருந்தவர்கள் கண்களை வேறு பக்கம் போக்கினர்.

# புரட்சி நடிகர்



# எம். ஜி. ஆர்.

தமிழ்ச்செல்வன்

தமிழ் நாட்டில் வெள்ளம் பெருகியது. ஏழைகளின் குடிசைகள் வெள்ளத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. "ஐயோ! பசி... பசி" எனமக்கள் ஓலமிட்டனர். "இதோ பசி தீர்க்கின்றேன்" என்று கூறித் தனது பணத்தைக் கத்தை கத்தையாகச் செலவு செய்து ஏழைகளுக்கு உணவும் உடையும் கொடுத்து மற்றும் என்ன என்ன உதவிகள் வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து, பணம் படைத்த மற்றும் நடிகர்களையும் ஏழைகளுக்கு உதவி செய்யத் தூண்டிய கலியுகப்பாரி ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர்தான் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

சினிமாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் சமூக சேவைகளில் ஈடுபடுவதைக் காண்பதரிது. நடிப்புத் துறையிலும் சமூகசேவையிலும் மக்களைக் கவர்ந்த நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், தனக்கென உரிய பாணியில் நடித்து மக்களைக் கவர்ந்ததுமட்டுமல்ல ஏழைகளைத் தன் அன்பால் கவர்ந்துள்ளார். ஏழைகள் அழுதால் அவரும் அழுவார் அவர்கள் சிரித்தால் அவரும் சிரிப்பார். இப்படி ஒரு தன்னலமற்ற தியாகி ஒருவர் தமிழ் சினிமா உலகில் இருப்பது எமக்குப் பெருமையே.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைக்குச் செல்லும் அன்பர்கள் நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைக் கண்டு அவர்களுடன் பேசாமல் வருவதரிது. தமிழ்நாட்டில் நான் தங்கி நின்ற சமயம் எம். ஜி. ஆர். அவர்களைச் சந்திக்கச்சென்றேன். அப்போது ''அரசிளங்குமரி'' திரைப்படம் வெளிவர இருவாரங்கள் இருந்தன. இதில் நடிகை பத்மினியுடன் எம். ஜி. ஆர், நடித்துள்ளார் மேற்படி படத்தின் இறுதிப் படப்பிடிப்பு மிக விரைவாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இரவு, பகல் என்றில்லாது நடித்துக்கொண்டிருந்தார். ஆகவே சாவகாசமாக அவருடன் உரையாட முடியவில்லை. மறுநாள் காலை பத்து மணிக்கு அவரது காரியாலயத்துக்குச் சென்றேன், அன்று என்னுடன் தமிழ்நாடு பூதான இயக்க அங்கத்தவர் ஸ்ரீ தியாகராஜன் அவர்களும் வந்தார். நாம் இருவரும் சென்ற கார் எம். ஜி. ஆர். காரியாலயத்திற்குமுன் நின்றதும். அங்கு நான் கண்ட காட்சி என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. காரணம் அங்கு கூடிநின்ற ஜனக்கூட்டமே. ''என்ன சார் ஏதாவது விபத்து நேர்ந்துவிட்டதா?'' என்று நண்பரைக் கேட்டேன். ''நம்ம எம். ஜி. ஆர். உள்ளே இருக்கின்றார். அவர் வெளியே வரும் சமயம் தாம் பார்த்து மகிழ்வதற்காக தினமும் இப்படித்தான் ரசிகர்கள் கூடி நிற்பார்கள்'' என்று கூறியதும் எம். ஜி. ஆர். அவர்களை எப்படியும் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

மற்றும் சினிமா நடிகர்களின் வீடுகளுக்குமுன் நிற்கும் கூர்க்கா காவற்காரன் இவரின் வீட்டு வாயிலில் இல்லை. அங்கு அசல் தமிழர் ஒருவரே நிற்கின்றார். அவர் எம்மை அன்புடன் அழைத்துச்சென்று ஆபீஸ் அறையில் அமரச் செய்தார். ஆபீஸ் உள்ளே நின்று சுமார் பன்னிரண்டு வயதுப் பையன் ஒருவன் காக்கி அங்கி அணிந்தபடி எம்முன் வந்து ''என்ன சார்'' என்று வினவமுன் ''ஐயாவைப் பார்க்கவேண்டும்' என்று கூறினேம். ''எந்த ஐயா'' என்று ஆச்சரியத்துடன் வினவினன். ''எம். ஜி. ஆர். என்று கூறிமுடிக்குமுன் ''ஓ... நம்ம எம். ஜி. ஆர். அண்ணனையா? என்ருன். ''அண்ணு என்றுதான் நாம் அழைக்கவேண்டுமென்பது அவரின் அன்புக் கட்டளை'' என்ருன் பையன். உடனே சென்று நாம் வந்திருப்பதாக மனேஜருடன் கதைத்துச் சிறிது நேரத்துக்குள் எம். ஜி. ஆர். அவர்களை நாம் இருந்த இடத்திற்கு அழைத்து வந்தான்.

கூப்பிய கரத்துடன் எம்முன் வந்த அண்ணு எம். ஜி. ஆர். அன்புடன் உரையாடினர். இச்சமயத்தில் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை நான் கூருமலிருக்க முடியாது. தலைவிரி கோலத்துடன் கந்தைச் சேலை அணிந்த பருவமங்கை ஒருத்தி தனியே வந்தாள். ''அண்ணு நான் யாருமற்ற அனுதை. திருச்சியிலிருந்து வருகின்றேன். நான் எழுதிய சில கதைகளும் நாடகங்களும் இதில் இருக்கின்றன. இதை எடுத்துக்கொண்டு ஏதாவது பணம் தாருங்கள்'' என்ருள். ''இந்த வயசில் இப்படித் தனியே திரியக்கூடாது. இந்த உலகம் பொல்லாதது'' என்று அப்பெண்ணுக்குப் புத்திமதி கூறி,

சிறிது பணம் கொடுத்து அனுப்பி விட்டார்.

இப்படியே தினமும் பல ஏழைகள் துயர் தீர்த்து வைப்பார்.


இதன் பின் என்னுடன் கலைச் செல்வி பற்றி மிக அக்கறையுடன் கதையை ஆரம்பித்தார். கலைச் செல்வியை அகில உலகிலுமுள்ள தமிழ் மக்களிடையே பரவச்செய்ய வேண்டுமென்று மனம் விட்டுக் கூறினார்

அவரின் நல்ல குணங்களை மட்டும் கூறிவிட்டு அவரின் பெரிய குறையைக் காட்டாமல் விடுவது பிழையல்லவா?

யாராவது பிறநாடுகளிலிருந்து அவரைப்பார்ப்பதற்காக சென்றுவிட்டால், அவர்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்துவிட்டு தான் செய்தது போதாதே, என்று வருந்துவார். இப்படி எம்மை எல்லாம் அன்பால் கவர்ந்து விட்டு, நாம் அவரை விட்டுப் பிரியும் சமயம், அன்பால் பிரிய முடியாது எம்மை கலங்க வைக்கும் இயற்கைக்குணம் அவரிடம் அமைந்திருப்பதுதான் அவரின் ஒரே குறை வான்புகழ் வள்ளுவனின் குறள் நீதியே அவரின் வாழ்க்கைக் குறிக்கோள் அறிஞர் அண்ணாவே அவரின் அரசியல் குரு.

கலைச்செல்விக்கு என் அன்பும், ஆதரவும் என்றென்றும் இருக்கும் என்று அவர் கூற, நாம் ஒருவரை ஒருவர் பிரிந்து கொண்டோம்.

---



டாக்டர் **மு. வ.** அவர்கள் எழுதிய **"பெற்ற மனம்"** படத்தின் விநியோக உரிமையை **சினிமாஸ்** லிமிடெட் ஸ்தாபனத்தினர் பெற்றுள்ளனர்.

நடிகர் திலகம் இலட்சிய நடிகர் விஜய லட்சுமி ஆகியோரை இங்கே காணலாம்.

## தேவிகா கடத்தப்பட்டார்!

"அஹ்......ஹ் ஹ்......ஹ" என்ற தனக்கே உரித்தான பாணியில் எடுப்பாகச் சிரித்த படியே தேவிகா (திலகவதி) இருந்த அறைக்குள் புகுந்தான் வீரப்பா (மாணிக்கம்). தன்னந் தனியே தலைவிரிகோலமாக சிறையிலிருந்த திலகவதியிடம் ஆறுதல் கூறி அவளைப் சாந்தப் படுத்தவா அங்கு சென்ருன் மாணிக்கம்? இல்லை. எடுத்த எடுப்பிலேயே "ம்......இணங்கி விடு திலகா" என்ருன். "சீ...... அறிவு கெட்டவனே நீ ஒரு ஆணு? இப்படித் தனியே ஒரு பெண்ணைச் சிறையிலிட்டு உன் இச்சையைத் தீர்க்க முயன்ருல் அது என்னைப் போன்ற பெண் ணிடம் முடியாதடா!" "ம்......" என்று மறுபடியும் மிரட்டினுன் மாணிக்கம். "சரி நாளைவரை உனக்கு அவகாசம் தருகிறேன். என் காதல் பசியைத் தீர்க்க நீ இணங்காவிட்டால்! அப்புறம் நான்...!!......" என்று இழுத்த படியே வெளியேறி விட்டான் மாணிக்கம்.

பி. வி என். புரொடக்ஷன்ஸ் மிக உன்னதமாகத் தயாரித்து வரும் "நாக நந்தினி" என்ற படத்தில், குறத்தி வேடம் தரித்து அஞ்சலியை அழைத் துச்சென்று அவளின் உதவி யால் தேவிகாவை கடத்திச் சென்ற வீரப்பா மேற்கூறியபடி இம்சைப்படுத்தும் காட்சியைக் காணலாம். நாகநந்தினியில், அஞ்சலி நந்தினியாகவும் வீரப்பா மாணிக்கமாகவும், தேவிகா திலகவதியாகவும், பாலாஜி ஜெயவீரனுகவும், நம்பி யார் சித்திரசேனனுகவும் நடிக் கிருர்கள்.


கதை வசனம்: கே. எம். நாராய ணசாமி. டைரக்ஷன்: ஜி, ஆர். நாதன்.

## டாக்டருக்கு மாலையிடவேண்டிய பத்மினி எம். ஜி. ஆர். கழுத்தில் மாலையிட்டார்.

வாள் வீசி, வேல் எறிந்து போர் புரிவதானுல் பிருதிவிக்கு நிகர் பிருதிவியே என்றளவுக்கு அவன் புகழ் ஓங்கியிருந்தது.

இந்த வீரனுக்கும் ராணி சம்யுக்திக்கும் ஏற்பட்ட காதல் அம்பலமாகியது. ஒன்றுபட்ட உள்ளங்களை வெட்டிவிட எண் ணினுன் அரசன். ராணிக்கு சுயமவரம் நடத்த எல்லா மன் னர்களையும் கொலுவுக்கு அழைத் தான். ஆனுல் எல்லா அரசிளங் குமரர்களும கொலுவீற்றிருக் கும் அவையில் பிருதிவியின் சிலை மட்டும் வைக்கப்பட்டிருந் தது. இந்த அநீதியைக் கண் ணுற்ற ராணி சிலையானுள்.

இறுதியில் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற முடிவுக்கு வந்தவளாய் மெல்லவே நடந்தாள். மானைப் பழித்த அவளின் பார்வை வேறு யாரையுமே பார்க்கவில்லை. பிருதிவிக்கே தன்னை அர்ப்பணித்த அவளின் உள்ளம், வேறு யாரையுமே நாடவில்லை. கையிலே மாலையுடன், தோகை மயிலைப் போல் அசைந்து சென்று பிருதிவியின் சிலையில் மாலையிட்டாள். மாலையிட்டு ராணி தனது கையை மெள்ள எடுத்ததும பிருதிவி ஓடோடி வந்து அவளின் கை பற்றி அவளை தன்னுடன் அழைத்துச் சென்றான்.



இத்தகைய அதிசயம். சாஸ்வதி பிக்சர்ஸ் தயாரித்து வரும் "ராணி சம்யுக்தா" என்ற படத்தில் காட்சியளிக்கின்றது.

தமிழ் சினிமாவில் "அழகு" என்றால் பத்மினி என்றும், "வீரம்" என்றால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். என்றும் கூறுமளவிற்கு இவர்கள் புகழ ஓங்கியுள்ளது. இவர்களிருவரும் ஒன்று சேர்ந்து நடிக்கும் "ராணி சம்யுக்தா"! உண்மையில் வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகமா? பத்மினி ராணி சம்யுக்தாவாகவும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பிருதிவியாகவும் நடிக்கும் இப்படத்தில் மற்றும் சிறந்த நடிகர்களான சகஸ்ரநாமம், தங்கவேலு, ராகினி, நம்பியார், முஸ்தபா, சக்கரபாணி முதலியோர் நடிக்கின்றார்கள். ஏராளமான பணச்செலவில் ஏ. ஸி. பிள்ளை இப்படத்தை தயாரித்து வருகின்றார். கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் எழுதியுள்ளதுடன் பாடல்களையும் எழுதியுள்ளார்.

## சி. சு. செ.

### "கலைக்குஞ்சு"

1960-ம் ஆண்டு அதிக வசூலைத் தந்த படம் படிக்காத மேதை!

⁘ ⁘ ⁘

பத்மினி நடிக்கும் ஸ்ரீ வள்ளி, புனர் ஜென்மம், செந்தாமரை போன்றவற்றின் படப்பிடிப்புகள் அனேகமாக இந்த மாசத்துடன் முடிவடைந்துவிடும். இவை முடிந்ததும் ஏப்பிரல் மாதம் பத்மினியின் திருமணம் நடைபெறும்.


மலாயாவில் அதிக வசூலைக் கொடுத்தது, புரட்சி நடிகரின் தயாரிப்பான "நாடோடி மன்னன்". நாடோடி மன்னனை திறம்படத் தயாரித்து வெளியிட்டமைக்கு நடிகர் எம். ஜி. ஆர் அவர்களைக் கௌரவித்து, அவருக்கு லட்ச ரூபா செலவில் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட காரைப் பரிசாகக் கொடுக்கப் போகின்றார்கள். அதைப் போய்ப் பெறுவதற்கு எம். ஜி. ஆர். நேரமில்லாது நீண்ட நாட்களாகவே மலாயாப் பிரயாணத்தைப் பின்போட்டு வருகின்றார்.

∴ ∴ ∴

"மணப்பந்தல்" படமூலம் நடிகர் அசோகன், தான் ஒரு சிறந்த நடிகரென நிருபித்துவிட்டார். மேற்படி படத்தில் திறம்பட நடித்துப் புகழ்பெற்ற அசோகன், இப்போ அதிகமான படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

∴ ∴ ∴

**கலைச்செல்வி**யில் அதிக அக்கறை கொண்டுள்ள ஒரு சினிமா நடிகர், கலைச்செல்வி விசேட நிருபரின் யோசனையின் பின், இலங்கை கலைஞர்களைக் கொண்டு தமிழ் நாட்டில் ஒரு படம் தயாரிக்க முயற்சி எடுக்கின்றார். முழுமுடிவும் கிடைத்ததும் கலைச்செல்வியில் விபரம் வெளியிடுவோம்.




**சினிமாஸ்**

**திரைகளில்**

காட்சியளிக்கவிருக்கும்

"எங்கள் செல்வி"

யில்

**நாகேஸ்வரராவ்**

✿

**அஞ்சலிதேவி**

ஆகியோர்

சிறப்பாக நடித்துள்ளனர்.

குழந்தைகளின் குறும்புச் சிரிப்பை
பெண்களின் இயற்கை எழிலை
திருமணக் காட்சிகளை

உயிரோவியமாக்கித்
தருகின்றோம்

பிறின்ஸ்

(உரிமையாளர் : M. நடராஜா)
கே. கே. எஸ். வீதி : : சுன்னாகம்.

"ஆசீர்" வெளியீடுகள்

படிமுறைக் கணிதம்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8ம் வகுப்புகளுக்கு | |
| 1.20 | 1.40 | 1.60 | 1.80 | 2.00 | 2.00 | 4.00 | ரூபா |

படிமுறை எண்கணிதப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| மத்திய வகுப்பு, | உயர்தர வகுப்பு தமிழ், | ஆங்கிலம் | சிங்களம் |
| 1.60 | 1.60 | 1.60 | 1.60 |

மாதிரிகை வினாப்பத்திரங்கள்:

| | | |
|---|---|---|
| 5, | J. S. C. | G. C. E. |
| -/50 | -/75. | 1.00 |

படிமுறை அட்சர கணிதம்


| | |
|---|---|
| 6, | 7, |
| 1.60 | (அச்சில்) |

ஏனைய வெளியீடுகள்:

இலக்கண விளக்கமும் பயிற்சியும் 4ம் 5ம் வகுப்பு, பயிலுந் தமிழ் முதலாம் பாகம், பாடக்குறிப்பும் பதிவும், இலங்கைப் பூமி சாத்திர வினாவிடைகள் முறையே 70, 80, 2. 00, 2. 00, 1. 25

கிடைக்குமிடம்

ஆசீர்வாத அச்சக-புத்தகசாலை,
32, கண்டிவீதி—யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 274



திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்கு
ஏற்ற நம்பிக்கை வாய்ந்த பம்!

உயர்ந்த சேவை
1½" மோடல் மணித்தியாலம் 1500—6000 கலன் இறைக்கிறது.
2" மோடல் மணித்தியாலம் 1680—11000 கலன் இறைக்கிறது,
3" மோடல் மணித்தியாலம் 4800—16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும் சக்ஷன் லிப்டும் தேவை
ஆகக்கூடுதல் முழு ஹெட் 70 அடி ஆகக்கூடுதல் சக்ஷன் லிப்ட் 25 அடி.

# விங்கெட்

இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

உப விநியோகஸ்தர்கள்:

## ராஜநாதன் அன் கம்பனி,

244, கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்

## தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பனி லிமிட்

பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி: 33. கொழும்பு
காட்சி அறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 70851.

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்


**எம். பூபாலசிங்கம்**

இராமலிங்கம் தெரு திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
போன்: 7014,

Registered at the G. P. O. as a Newspaper. KALAICHELVI


# சி. சி. சி.

## புகையிலைப் பசளை



**Colombo Commercial Co., Ltd.**

UNION PLACE ::: COLOMBO - 2.


யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சுன்னைகம், கலாதேவி அச்சகத்தி[ல்]
அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.